விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 21 திங்கட்கிழமை (05.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 076


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# மக்களை நேசிப்பவர்கள் பேரவையில் இணையலாம்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் அழைப்பு



(வவுனியா)

மக்களை நேசிக்கும் பண்பான மனிதர்கள் அரசியலில் சேராவிட்டாலும், மக்கள் இயக்கமாகப் பரிணமித்திருக்கும் தமிழ் மக்கள் பேரவையில் இணையலாம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச பொலிஸாரின் உதவியுடன்

## அர்ஜுன் மகேந்திரனை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை, சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்யவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள் 23

பனையிலிருந்து விழுந்த

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பனை மரத்தில் இருந்து விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் இரண்டரை மாதங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். 02

## ஐ.தே.க. அறிக்கை இன்று பிரதமரிடம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக மறு சீரமைப்பு செய்வது தொடர்பில் கருத்தறிவதற்கு அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன இக்குழுவின் தலைவராக நியமிக் 23

## கடந்த காலங்களில் 5 ஆயிரம் படையினர் காணாமல் போயுள்ளனர் - மங்கள சமரவீர தகவல்

(கொழும்பு)

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் ஒரு தரப்பினருக்கு வரையறுக்கப்பட்டதல்ல 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட படையினர் கடந்த காலங்களில் காணாமல் போயிருந்தனர். 23

## புலிக்கு பயந்து இந்தியாவில் தஞ்சமடையவோ புலிகளை அழிக்கவோ எனக்கு தேவையிருக்கவில்லை

### இந்திய தூதுவர் முன் முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புலிகளுக்குப் பயந்து இந்திய நாட்டைத் தஞ்சம் அடையவோ இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து புலிகளை அழிக்கவோ எனக்குத்தேவையிருக்கவில்லை என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், எமது அரசியற் கொள்கைகளில் வழுவாது நின்று எமது மக்களுக்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய அனைத்து அனுகூலங்களையும் பெற்றுக்கொடுப்பதே எமது சிந்தனையாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனுக்கான பிரிவு உபசார வைபவம் நேற்று வடமாகாண சபை அலுவலக கேட்போர் 23

## பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

### நாளை சபாநாயகரிடம்; மகிந்த அணி அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நாளை செவ்வாய்க் கிழமை கையளிக்கப்படும் என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைகொண்டு வருவதில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் பேச்சு 23


## இலங்கைக்கு வந்தடைந்தார் ஐ.நாவின் சிறப்புத்தூதுவர்

### பல தரப்பினரை சந்திக்கவுள்ளார்



23

## தருமபுரம் கல்மடு காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



ஒருவர் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்மடுக் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை கைப்பற்றி 80 லீற்றர் கசிப்பையும் மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களுடன் சம்பவ 23

## வடமராட்சிப் பகுதியில் கஞ்சாவுடன் பெண் கைது

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் 10 கிராம் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு நிலத்தில் புதைத்து வைத்திருந்த தகரப்பேணி ஒன்றிற்குள் இருந்த கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## மாகாணசபைக்கான தொகுதிவரையறை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கான தேர்தல் தொகுதிகளை வரையறுக்கும் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 9 மாகாண சபைகளுக்கும் 222 தொகுதிகளை குழு பரிந் 02

## பயமின்றி சாட்சி சொல்ல முன்வாருங்கள்

## சட்டமா, பொலிஸ்மா அதிபரிடம் அம்பாறை தாக்குதல் சம்பவம் ஒப்படைப்பு

### பிரதமர் ரணில் நேரில் சென்று அறிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை தாக்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணைகளில் குறைபாடுகள்



இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்து, சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பை சட்டமா அதிபரிடமும் பொலிஸ் மா அதிபரிடமும் ஒப்படைத்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒலுவிலில் 24

## காப்புறுதி நிறுவனத்தால் ஏமாற்றப்பட்டவர் உயிர் மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் ஏமாற்றப்பட்டதன் விளைவாக நஞ்சருந்திய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று 02

## கொக்குவில் பகுதியிலுள்ள வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

### இருவரை மடக்கிப் பிடித்த ஊர் மக்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியிலுள்ள வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் மேற்கொண்ட நபர்களில் இருவரை மடக்கிப் பிடித்த ஊர் மக்கள் அவர்கள் மேல் சரமாரியாக தாக்குதல் நடத்திய பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத் 23

## தமிழக மீனவர்களுக்கு கடற்படையினர் கடும் எச்சரிக்கை

(சென்னை)

கச்சத்தீவு அருகே கடற்றொழிலில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் எச்சரித்து திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். 02

# ஏறாவூர் பொலிஸ் பிரிவில் 13 வயதுடைய பாடசாலை மாணவனை காணவில்லை

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பொலிஸ் பிரிவு மிச்நகர், தாமரைக்கேணி கிராமத்தில் வசித்து வந்த 13 வயதுடைய பாடசாலை மாணவனைக் காணவில்லை என அவரது பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தாமரைக்கேணி அலிஸாஹிர் மௌலானா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் முஹம்மது அனீஸ் முஹம்மது இர்ஷாத் (வயது 13) என்ற மாணவனே கடந்த வியாழக்கிழமை அன்று மாலையிலிருந்து காணாமல் போயிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று மாலை 4 மணிக்குப் பின்னர் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுச் சென்றவர் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை.

அதேவேளை, தனது மகன் கொண்டு சென்ற சைக்கிள் ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு பஸ் தரிப்பிடத்திற்குச் சமீபமாகவுள்ள வீடொன்றில் இருப்பது தெரியவந்தது.

அங்கு சைக்கிளை வைத்து விட்டு தான் காத்தான்குடிக்குச் செல்வதாகவும் பின்னர் வந்து சைக்கிளை எடுத்துக் கொள்வதாகவும், அந்த வீட்டாரிடம் கூறிவிட்டு சென்றதாக அறியக் கிடைத்தது என காணாமல் போன சிறுவனின் தாய் பாத்திமா ஸபிய்யா தெரிவித்தார்.

மேற்படி சிறுவன் பாடசாலைக் கல்வியுடன் மார்க்கக் கல்வி அல்குர்ஆன் ஓதல் வகுப்புக்கும் சென்றுகொண்டிருந்த நிலையிலேயே காணாமல் போயுள்ளார் என பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சிறுவனைப் பற்றிய ஏதாவது விவரங்கள் தெரிந்தால் 0652240487 எனும் ஏறாவூர் பொலிஸாரின் தொலைபேசிக்கோ அல்லது 0754392285 எனும் தமது தொலைபேசி இலக்கத்துக்கோ தயவுடன் அறியத் தருமாறு காணாமல் போன சிறுவனின் தந்தை முஹம்மது அனீஸ் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (ம)

# சிலாபத்தில் சிறுவன் கொலையுடன் தொடர்புடையவர் முல்லையில் கைது

சிலாபம் பகுதியில் கடந்த 25ஆம் திகதி 9 வயது சிறுவன் ஒருவன் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில், முல்லைத்தீவில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கடந்த 25ஆம் திகதி சிலாபம் இரணவில பகுதியில் 9 வயது சிறுவன் ஒருவன் காட்டுப் பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த கொலை தொடர்பில் சிறுவனை கடத்தி கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் பொலிஸார் தேடி வந்த நிலையில் குறித்த சந்தேக நபர் முல்லைத்தீவு நாயாறு பகுதியில் மீன்பிடி வாடியில் வைத்து நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளார்

குறித்த சந்தேக நபர் தற்போது முல்லைத தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் சிலாபம் பொலிஸார் முல்லைத்தீவு பொலிஸாருடன் இணைந்து சந்தேக நபரை உறுதிப்படுத்தும் நடவடிக்கைக்காக தற்போது முல்லைத்தீவுக்கு வருகை தந்துள்ளனர் விசாரணைகளைத் தொடர்ந்து சிலாபம் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர். (ம-281)

## தமிழக மீனவர்களுக்கு...

சுமார் 400க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் இவ்வாறு திருப்பியனுப்பட்டுள்ளதாக, தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர்கள் ராமேஸ்வரத்தை சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## மாகாண சபை...

துரைத்துள்ளது.

இதற்கமைய, 50 வீதமான உறுப்பினர்கள் நேரடியாகவும், 50 வீதமான உறுப்பினர்கள் மாவட்ட அடிப்படையில் விகிதாசார முறைப்படியும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்காக, மாகாண சபைகளின் தேர்தல் தொகுதிகளை வரையறுக்கும் பணிகள் கலாநிதி கே.தவலிங்கம் தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் குழு 4 மாதங்களில் தமது அறிக்கையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றுக்கு சமர்ப்பித்ததன் மூலம் எனது பணி நிறைவடைந்துவிட்டது. நாடாளுமன்றம் எடுக்கும் நடவடிக்கையின் ஊடாக தேர்தலை விரைவாக நடத்த முடியும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

இந்த அறிக்கையின்படி, நாடு முழுவதும், 222 மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

இன விகிதாசார அடிப்படையில், மொத்தமுள்ள 222 மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளில், 175 தொகுதிகள் (78.4 சதவீதம்) சிங்களவர்களுக்கானதாகவும், 25 தொகுதிகள் (11.26 சதவீதம்) தமிழர்களுக்கானதாகவும், 13 தொகுதிகள் (5.8 சதவீதம்) முஸ்லிம்களுக்கானதாகவும், 9 தொகுதிகள் (4.5 சதவீதம்) மலையகத் தமிழர்களுக்கானதாகவும் உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ம)

## சட்டமா, பொலிஸ்மா...

தொரு சம்பவம் நடந்திருக்கக் கூடாது.

இச்சம்பவத்தையிட்டு நான் மிகவும் கவலையடைகிறேன். அமைச்சர் ரவூப் ஹக்கீம் என்னை அடிக்கடி தொடர்புகொண்டு இச்சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி வந்தார். நான் சிங்கப்பூரில் இருக்கும்போதும் தொலைபேசி மூலம் அவருடன் தொடர்புகொண்டு இதுபற்றி கலந்துரையாடினேன்.

சாட்சியங்கள் அழிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விசாரணையை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பொலிஸ் விசேட குழுவே இனி கையாளும் எனத் தெரிவித்த பிரதமர், அம்பாறை பள்ளிவாசலுக்கு பாதுகாப்பு வழங்க அங்கு பாதுகாப்பு அரண் ஒன்றை அமைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைதுசெய்வதற்கு, பயமில்லாமல் சாட்சி சொல்ல முன்வரவேண்டும். சாட்சி சொல்பவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அத்துடன் வெளியிலிருந்து வருபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தாக்குதலில் ஈடுபட்ட சகலரும் புதிய விசாரணை மூலம் விரைவில் கைதுசெய்யப்பட்டு, அவருக்கு உரிய சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் பிரதமர் மேலும் உறுதியளித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம். மன்சூர், அலிசாஹிர் மௌலானா, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல். தவம், ஆரிப் சம்சுதீன், முஸ்லிம்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணிகள், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளன முக்கியஸ்தர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டதாக ஸ்ரீ ல.மு.கா. இன் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ம)

# முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டு விட்டு மகிந்தவின் புராணம் பாடுகின்றனர்

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

இரவு நேரங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளையும் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, காலையில் எழும்பி மகிந்த நாமம் கொண்டு, அதனை மறைக்க முயற்சிப்பதைவிட கையாலாகாததனம் வேறு எதுவுமில்லை என அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்தார்.

செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அம்பாறை தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

இந்த ஆட்சியில் என்ன தவறு நடைபெற்றாலும், அதற்கு மகிந்த என்ற நாமத்தின் மீது பிழைகள் அனைத்தையும் பூசி, இவ்வாட்சியாளர்கள் தப்பிக்க முயல்கின்றனர்.

இவர்களின் இந்த பிரசாரம் முஸ்லிம்களிடத்தில் மிக அதிகமாக இடம்பெறுகிறது. அண்மையில் அம்பாறை நகரில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு செயற்பாடு நடைபெற்றிருந்தது. இதனையும் எங்கள் தலையில் போடும் வகையில் கருத்து தெரிவித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இதுவரை காலமும் இவ்வரசினர் அலுத்கமை கலவரத்தை ஞாபகப்படுத்தி படத்தை ஓட்டினார்கள். அதன் பிறகு கிந்தோட்டை, அம்பாறை என இரு பெரும் கலவரங்கள் நடைபெற்று முடிந்துவிட்டன. எங்கள் காலத்தில் இடம்பெற்றதையும் நாங்கள் தான் செய்தோமாம், அவர்கள் காலத்தில் இடம் பெற்றதையும் நாங்கள் தான் செய்தோமாம். இரவு நேரங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளையும் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, காலையில் எழும்பி மகிந்த நாமம் கொண்டு மூடி மறைக்க பார்க்கின்றார்கள்.

இது தான் நாம் கூறுவது. அளுத்கமை, கிந்தோட்டை, அம்பாறை உட்பட இன்னும் முஸ்லிம்களுக்கு எதிராக என்னவென்ன சம்பவங்கள் எல்லாம் இடம்பெற்றதோ, அத்தனையையும் சீரான விதத்தில் விசாரணை செய்து, நீதியை நிலை நாட்டுங்கள்.

அதற்கு நாங்கள் ஏதேனும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமாக இருந்தால், பூரண மனதுடன் ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக உள்ளோம். மிகக் கடுமையான தண்டனைகளோடு, கைது செய்யப்படுகையில் அனைத்து உண்மைகளும் வெளிப்படும். இந்த ஆட்சியாளர்கள் ஒரு போதும் குற்றவாளிகளை க்கைது செய்ய மாட்டார்கள் என்ற விடயமும் எங்களுக்கு தெரியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# லிற்றோ காஸ் அதிர்ஷ்டம் இன்று

வட மாகாண லிற்றோகாஸ் விநியோகஸ்தரான S.V.முருகேசு நிறுவனத்தினரால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பொங்கும் அதிர்ஷ்டம் மூலம் சிலிண்டர் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களுக்கான அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வானது இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள S.V.முருகேசு லிற்றோகாஸ் விநியோக நிறுவனத்தில் விற்பனையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் முன்னிலையில் நடைபெறும். (ம-17)

# பெற்றோலினை திருடியவர் பொலிஸாரால் கைது

பெற்றோலினைத் திருடி விற்பனை செய்ய முயற்சித்த நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ள சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இதன்படி வவுனியா தொடருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருளை ஏற்றிச்சென்ற கொள்கலன் ஒன்றில் இருந்தே பெற்றோலினைத் திருடி விற்பனை செய்ய முயற்சித்த ஒன்பது நபர்களை, வவுனியாவில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சம்பவத்துடன் எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ம)

## ஏமாற்றப்பட்டவர்...

வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி இரண்டு நாட்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்

சாவகச்சேரி சரசாலை வடக்கை சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான சின்னப்பு கெங்காதரன் (வயது 61) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் சொந்தமாக பாரவூர்தி ஒன்றை வைத்திருந்துள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி மதவாச்சி பகுதியில் ஒரு ஏற்ற சென்ற போது பாரவூர்தி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பாரவூர்தியை திருத்தம் செய்வதற்கு உரிய பணத்தை இவர் காப்புறுதி செய்த நிறுவனத்திடம் இருந்து பெறுவதற்கு முயற்சி செய்துள்ளார். ஆனால் குறித்த நிறுவனம் அவருக்கு பணத்தை கொடுக்காது தொடர்ச்சியாக பின்னடித்து வந்துள்ளது.

இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான குறித்த நபர் கடந்த முதலாம் திகதி தனது தோட்டத்தில் இருந்த நஞ்சு மருந்தை குடித்துவிட்டு மயங்கிய நிலையில் இருந்துள்ளார்.

இவர் மயங்கிய நிலையில் இருப்பதை கண்ட அயலவர் ஒருவர் உறவினர்களுக்கு தகவலை தெரிவித்து உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது ஆனால் சிகிச்சை பலனின்றி 2 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி கே.இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## குடும்பஸ்தர்...

பண்டத்தரிப்பு சாந்தையை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான துரைச்சாமி ஸ்ரீகாண்டீபன் (வயது 38) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 27ஆம் திகதி பனை மரத்தில் ஓலை வெட்டுவதற்காக ஏறியுள்ளார். தவறுதலாக கீழே விழுந்த இவர் சம்பவ இடத்திலேயே மயக்கமடைந்திருந்தார்.

உடனடியாக சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. கோமா நிலையில் இருந்த இவர் சிகிச்சைபலனின்றிநேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இந்த மரணவிசாரணையை யாழ்போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

**வீடு வாடகைக்கு உண்டு**

திருநெல்வேலி முடமாவடிச் சந்தியை அண்மித்த பூங்கனிச் சோலைக்கு அருகில் 02 அறைகள், சமையல் அறை மற்றும் விறாந்தையுடன் கூடிய வசதியான வீடு வாடகைக்கு உண்டு. (இ)

**தொடர்பு:0778266275**

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையில் அலுவலக உதவியாளராக கடமையாற்றும் செல்வி அ.ஜெஜீபா அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி அருணகிரிநாதர் சிவமணி**



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை [3116] பாடசாலைச் சமூகம்.

# இந்து ஆலயங்கள் தாக்கப்படுவதை கண்டித்து நல்லூரில் நேற்றுக் கவனயீர்ப்புப் பேரணி

## சைவசமய விவகார பண்பாட்டு அலகு அமைக்கக் கோரிக்கை










படங்கள்: ஐ. சிவசாந்தன்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் இந்து ஆலயங்கள் திட்டமிட்டு சேதமாக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சைவ சமயத்தவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு தீர்வினை வலியுறுத்தியும், அகில இலங்கை சைவ மகா சபையினரின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பித்த இந்தப் பேரணி கோவில் வீதி ஊடாகச் சென்று கைலாசப்பிள்ளையார் கோவிலைச் சென்றடைந்தது. இதன்போது சைவ சமய பெரியவர்கள் தமது கருத்துக்களையும் எதிர்காலத்தில் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடியதுடன், வடக்கு மாகாண முதலமைச்சருடைய வாசஸ்தலத்துக்கு சென்று மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

அந்த மகஜரில் வடக்கு மாகாணத்தில் இந்துக்களின் வழிபாட்டிடங்கள், தெய்வச்சிலைகள் என்பன தொடர்ச்சியான முறையில் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. இதில் கூடுதலாக மன்னார் மாவட்டத்தில் இடம்பெறுகின்றமை வேதனைக்குரிய விடயம். இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதாக இதுவரை தெரியவில்லை.

சைவத்தமிழ் தனித்துவ அடையாளங்களைச் சிதைக்கும் வகையிலான செயற்பாடுகள் சைவர்கள் மத்தியில் மன ஆதங்கத்தையும் துயரத்தையும் ஏற்படுத்துகிறது.

மேலும் இலங்கையில் உள்ள வேறு மதத்தவர்களின் பிரசித்திபெற்ற வழிபாட்டு இடங்களுக்கு அருகில் ஏனைய மதச்சின்னங்கள் நிறுவப்பட அனுமதிக்காத நிலையில், வலிந்து திருக்கேதீஸ்வர ஆலய சூழலில் காணிகள் அபகரிக்கப்படுவதும், ஏனைய மதஸ்தலங்கள் நிறுவப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

சிவபூமியான தமிழர் தாயகத்தின் பல இடங்களில் வேறு மதத்தவர் வசிக்காத இடங்களிலும் அவர்களின் மத வழிபாட்டிடங்கள் அமைக்கப்படுகின்றன. அதனூடாக எமது வழிபாட்டிடங்கள் சேதமாக்கப்படுகின்றன.

எனவே இந்துக்களின் வழிபாட்டிடங்கள் தாக்கப்படுவதை நிறுத்துவதற்கான பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும், குற்றவாளிகளைக் கண்டறியக்கூடிய வகையில் விசாரணைகளை துரிதப்படுத்தப்பட வேண்டும், அத்துடன் அதன் பின்னணியை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மத்திய அரசின் ஊடாக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

மேலும், சைவசமயத்தவர் எதிர்நோக்கும் நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் சைவத்தமிழ் கலாசார விழுமியங்கள், வரலாற்று தொன்மங்கள் என்பவற்றை பாதுகாத்து அடுத்த தலை முறைக்கு கையளிக்கும் வகையில் மாகாண அமைச்சின் கீழ் "சைவசமய விவகார பண்பாட்டு அலகு" ஒன்றினை ஏற்படுத்தி தவணை அடிப்படையில் சமயத்தலைவர்களை அழைத்து பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கைகளை தமது மகஜரில் உள்ளடக்கியுள்ளனர்.

இந்தப் பேரணியில் ஆதீன முதல்வர்கள், துறவிகள், இந்து ஆலயங்களின் பரிபாலன, தர்மகத்தா சபையினர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# சட்டம் ஒழுங்கு யாருக்கு ஜனாதிபதியும் பிரதமருமே தீர்மானிக்க வேண்டுமாம்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சினை பொறுப்பேற்பதற்கு பொருத்தமானவர்கள் இனங்காணப்படாமையினாலேயே அதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுள்ளார். அதனை அடுத்து யாருக்கு வழங்க வேணடும் என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவி தொடர்பில் நிலவுகின்ற சர்ச்சைக் கருத்துக்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அமைச்சரவை அமைச்சுக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு வகையான கருத்துக்களை முன்வைத்துக்கொண்டிருக்கின்றனர். அவற்றின்படி சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவி தொடர்பாக பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. அவ்வமைச்சை முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கலாம் என்றவகையிலான கருத்துக்கள் நிலவுகின்றன.

ஆனால் இது தொடர்பில் இதுவரையில் எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அதேவேளை, சரத் பொன்சேகாவுக்கு வழங்குதல் தொடர்பான எந்தவித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை.

சட்டம் ஒழுங்கு அமைச்சினை பொறுப்பேற்கக்கூடிய அதற்கு பொருத்தமானவர்கள் இனங்காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிர்காலத்தில் அப்பதவி வழங்கப்படலாம். அது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே தீர்மானிக்க வேண்டும். அதனை ஐக்கிய தேசிய கட்சியோ அல்லது சுதந்திர கட்சியோ தனித்து தீர்மானிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### மதத்தின் பெயரால்

# முரண்பாடுகளை ஏற்படுத்துவோர் குறித்து அவதானத்துடன் செயற்படல் வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

மதத்தின் பெயரால் முரண்பாடுகளை ஏற்படுத்துபவர்கள் தொடர்பாக அவதானத்துடன்செயற்படவேண்டும் எனத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், நாம் எடுக்கும் நடவடிக்கைகள் மதங்களுக்கு இடையே முரண்பாட்டையும் மக்கள் மத்தியில் அமைதியின்மையையும் ஏற்படுத்தக்கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சைவ மதத்தவருடைய வழிபாட்டுதலங்கள் சேதப்படுத்தப்படுவதும், இந்து மக்களுக்கு ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகள் பற்றி இந்து சமய தலைவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து நேற்று கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து சமயத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என ஏற்கனவே பலருடன் கலந்துரையாடியுள்ளேன்.

ஒரு மதத்தின் பெயரால் நாம் எடுக்கும் நடவடிக்கைகள் ஏனைய மதங்களுக்கிடையே முரண்பாடுகளையும் மக்கள் மத்தியில் எந்தவித அமைதியின்மையையும் ஏற்படுத்தக்கூடாது.

ஆனால் தொடர்ச்சியாக மேற்குறித்த விடயங்கள் மக்களை பாதிப்பது தொடர்பில் கவனத்திலெடுக்க வேண்டும். இது தொடர்பாக மத தலைவர்களுடன் பேசி ஒரு தீர்வு காணக்கூடியதாக இருக்கும். அதை முதற்கட்டமாக செய்யவுள்ளோம். ஒருசிலர் வேண்டும் என்றே மதங்களுக்கு இடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கிறார்கள். அவர்களின் பின்னணி என்னவென்றே தெரியாது. அவர்கள் மதத்துக்கு சம்பந்தம் இல்லாதவர்களாக இருந்து கொண்டு மதத்தின் பெயரால் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பில் மிக அவதானமாக அனைவரும் பேசி ஒரு தீர்வுக்கு வர வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் சைவசமய விவகார பண்பாட்டு அலகு ஒன்றை ஆரம்பிக்குமாறு கோரியிருந்தார்கள். குறித்த விடயம் தொடர்பாக மாகாண சபை சட்டத்தில் உள்ளதா என ஆராய்ந்து நடவடிக்கைகளை காலப்போக்கில் எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

டர்பன் டெஸ்ட் 4ம் நாள்

## மார்க்ரம் துணிச்சலான சதம்

# வெற்றியின் விளிம்பில் ஆஸி



4/49 ஓட்டங்கள் என்ற மோசமான நிலையில் இருந்து மார்க்ரமின் துணிச்சலான சதம், டி ஹொக்கின் அரைச் சதத்தின் உதவியுடன் மீண்டெழுந்த தென்னாபிரிக்க அணி, அவுஸ்திரேலியாவிடம் முற்றுமுழுதாக சரணாகதியடையாமல் கௌரவமான தோல்வியை எதிர்நோக்கியுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் டர்பனில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 351, தென்னாபிரிக்கா 162 ஓட்டங்கள் எடுத்தன.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் நிறைவில், 2 ஆவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி, 9 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

கம்மின்ஸ் (17), ஹேசல்வுட் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் நடந்தது. அவுஸ்திரேலிய அணிக்கு கம்மின்ஸ் (26) ஆறுதல் கொடுத்தார்.

2ஆவது இன்னிங் சில் அவுஸ்திரேலிய அணி, 227 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஹேசல்வுட் (9) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் கேஷவ் மகராஜ் 4 விக்கெட் கைப்பற்றினார்.

**மார்க்ரம் சதம்**

பின், 417 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு டீன் எல்கர் (9), அம்லா (8), டி வில்லியர்ஸ் (0), அணித் தலைவர் டு பிளசி (4) ஏமாற்றினர்.

இதனால் தென்னாபிரிக்க அணி ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுக்களை வெறும் 49 ஓட்டங்களுக்கு இழந்து திணறியது.

எனினும் அதன் பின் களமிறங்கிய டி புருய்ன் (36) ஆறுதல் கொடுத்தார். பின் மார்க்ரம், குயின்ரன் டி காக் ஜோடி போராடியது. மார்க்ரம் சதம் கடந்தார். மறுமுனையில் குயின்ரன், அரைச்சதமடித்தார். ஆறாவது விக்கெட்டுக்கு 147 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது, மிட்சல் மார்ஷ் பந்தில் மார்க்ரம் (143) ஆட்டமிழந்தார். மிட்சல் ஸ்ரார்க் வீசிய 80 ஆவது ஓவரில் பிலாண்டர் (6), மகராஜ் (0), ரபாடா (0) வெளியேறினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி, 9 விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட் டங்கள் எடுத்திருந்தபோது போதிய வெளிச்சமின்மை காரணமாக 4 ஆம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. குயின்ரன் (81), மார்கல் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் மீண்டும் அசத்திய ஸ்ரார்க் 74 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தென்னாபிரக்க அணிக்கு இன்னும் ஒரு விக்கெட் மட்டுமே மீதமிருப்பதால், அவுஸதிரேலியாவின் வெற்றி வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது.

## நாளை ஆரம்பமாகிறது மும்முனை மோதல்

# முத்திரை பதிக்குமா இலங்கை சிங்கங்கள்?



இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு 'ரி20' தொடர் கொழும்பில் நாளை ஆரம்பமாகிறது. இதில் இலங்கை முத்திரை பதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் முத்தரப்பு 'ரி20' தொடர் நாளை முதல் வரும் 18 வரை நடக்கிறது.

இதில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

சமீபத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த ஒருநாள் மற்றும் 'ரி20' தொடர்களை கைபற்றிய உற்சாகத்தில் இந்திய அணி உள்ளது.

வழமையான அணித் தலைவர் விராட் ஹோலி, விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தோனி, வேகப்பந்து வீச்சாளர்களான புவனேஷ்வர் குமார், பும்ரா, சகல துறை வீரர் ஹர்திக் பாண்ட்யா, 'சைனாமேன்' சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் உள்ளிட்டோருக்கு ஒய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக், ஷிகர் தவான், சுரேஷ் ரெய்னா ஆகியோர் மட்டுமே சீனியர் வீரர்களாக உள்ளனர்.

**இளம் படை**

ரோகித் சர்மா தலைமையில் களமிறங்கும் இந்திய அணியில் ரிஷாப் பண்ட், லோகேஷ் ராகுல், வாஷிங்டன் சுந்தர், விஜய் சங்கர், தீபக் ஹூடா, ஷர்துல் தாகூர், ஜெயதேவ் உனத்கட் என நிறைய இளம் வீரர்களுக்கு வாயப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சியாளர் பலம்**

சமீபத்தில் பங்களாதேஷ் மண்ணில் நடந்த டெஸ்ட், 'ரி20' மற்றும் முத்தரப்பு ஒரு நாள் தொடர்களை கைப்பற்றிய உற்சாகத்தில் இலங்கை அணி உள்ளது.

புதிய பயிற்சியாளர் சந்திக ஹத்துருசிங்க பயிற்சியின் கீழ் விளையாட இருப்பது கூடுதல் பலம் சேர்ககலாம். மத்யூஸ் காயத்தால் விலகியதால் சண்டிமல் தலைமையில் இலங்கை அணி களம் காண்கிறது.

இதுகுறித்து பயிற்சியாளர ஹத்துருசிங்க கூறுகையில், "முத்தரப்பு தொடரில் பலம் வாய்ந்த இரண்டு அணிகளை சந்திக்க உள்ளோம் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. இருப்பினும் முழுத்திறமையை வெளிப்புடுத்தி வெற்றி பெற முயற்சிப்போம். பொதுவாக எந்த ஒரு விளையாட்டாக இருந்தாலும் ஒரு அணிக்கு மட்டும் வெற்றி சொந்தமாகாது என்றார்.

**வோல்ஷ் நம்பிக்கை**


முன்னாள் மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் வோல்ஷ், தற்காலிக பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருப்பது பங்களாதேஷ் வீரர்களுக்கு மனதளவில் நம்பிக்கை அளிக்கும். வழமையான அணித் தலைவர் சகிப் அல் ஹசன் காயத்தால் விலகியதால், மகமதுல்லா அணியை வழி நடத்துகிறார்.

**புறப்பட்டது இந்திய படை**

முத்தரப்பு 'ரி20' தொடரில் பங்கேற்பதற்காக ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி, மும்பையில் இருந்து இலங்கைக்கு புறப்பட்டது.

**அணி விபரம்:** ரோகித் சர்மா (அணித் தலைவர்), தவான், லோகேஷ் ராகுல், ரெய்னா, மணிஷ் பாண்டே, தினேஷ் கார்த்திக் (விக்கெட் காப்பாளர்), தீபக் ஹூடா, வாஷிங்டன் சுந்தர், விஜய் சங்கர், சகால், அக்சர் படேல், ஷர்துல் தாகூர், உனத் கட், முகமது சிராஜ், ரிஷாப் பண்ட (விக்கெட் காப்பாளர்).

# கொல்கத்தாவின் தலைவரானார் கார்த்திக்



ஐ.பி.எல்., தொடரில் இடம்பெற்றுள்ள கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் புதிய தலைவராக விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தினேஷ் கார்த்திக் நியமிக்கப்பட்டுள்ளதுடன், துணைத் தலைவராக ரொபின் உத்தப்பா அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) சார்பில் நடத்தப்படும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,) 'ரி20' தொடரின் 11ஆவது சீசன் எதிர் வரும் ஏப். 7ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதில் சென்னை, கொல்கத்தா, மும்பை, டில்லி, பஞ்சாப், ராஜஸ்தான், பெங்களூரு, ஹைதராபாத் என 8 அணிகள் பங்கேற்கின்றன.

இதற்கான வீரர்கள் ஏலம் சமீபத்தில் பெங்களூருவில் நடந்தது.

கடந்த 2011 முதல் 2017 வரை கொல்கத்தா அணிக்கு தலைவராக செயற்பட்ட கௌதம் கம்பீர், 2 முறை (2012, 2014) கிண்ணம் வென்று கொடுத்துள்ளார்.

இருப்பினும் இவரை கொல்கத்தா அணி நிர்வாகம் தக்கவைத்துக் கொள்ளவில்லை. வீரர்கள் ஏலத்தில் இவரை ரூ. 2.80 கோடிக்கு டில்லி அணி ஒப்பந்தம் செய்தது. இதனால் புதிய தலைவரை தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் கொல்கத்தா அணிக்கு ஏற்பட்டது.

இதனையடுத்து, இம்முறை வீரர்கள் ஏலத்தில் ரூ. 7.40 கோடிக்கு ஒப்பந்தம் செய்த தமிழக விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீர்தினேஷ் கார்த்திக்கை புதிய தலைவராக கொல்கத்தா அணி நிர்வாகம் அறிவித்தது.

இதேபோல, துணைத் தலைவராக ரூ. 6.40 கோடிக்கு ஒப்பந்தமான ரொபின் உத்தப்பா நியமிக்கப்பட்டார்.

# ரொனால்டோ அதிவேக '300'



லா லிகா கால்பந்து தொடரில் அதிவேக 300 கோல் அடித்த வீரர் என்ற வரலாறு படைத்தார் ரொனால்டோ.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. மட்ரிட் நகரில் நடந்த லீக் போட்டியில் ரியல் மட்ரிட், கடாபே அணிகள் மோதின. இதன் 24ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணிக்காக கரேத்பீலே முதல்கோல் அடித்தார். பின், அசத்திய ரியல் மட்ரிட் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (45+1, 78ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார். எதிரணி சார்பில் போர்டிலோ (65) மட்டும் ஆறுதல் கொடுத்தார். முடிவில் ரியல் மட்ரிட் அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

1

லா லிகா தொடரில் 300 கோலை அதிவேகமாக அடித்த முதல் வீரர் என்ற சாதனையை எட்டினார் ரொனால்டோ. இதுவரை இவர் 286 போட்டியில் 301 கோல் பதிவு செய்துள்ளார். பார்சிலோனாவின் மெஸ்சி 334 போட்டியில்தான் இந்த மைலகல்லை எட்டி இருந்தார்.

2

இப்போட்டியில் கலக்கிய, ரொனால்டோ லா லிகா தொடரில் 300வது கோல் அடித்தார். இதன்மூலம், இந்த இலக்கை எட்டிய 2 ஆவது வீரர் என்ற சாதனை படைத்தார். இதற்கு முன், பார்சிலோனாவின் மெஸ்சி (372 கோல்) இந்த சாதனையை நிகழ்த்தி இருந்தார்.

# மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஜனாதிபதி வழிபாடு




இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத திரிபால சிறிசேன மட்டக்க ளப்பு ஸ்ரீ மங்களாராம விகாரைக்குச் சென்றார்.

அங்கு அம்பிட்டியே சுமண ரத்ன தேரரைச் சந்தித்து அவரது சுகதுக்கங்களை கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஸ்ரீமாமாங் கேஸ்வரர் கோயிலுக்கு சென்ற ஜனாதிபதி அங்கு இடம்பெற்ற வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கோயிலுக்கு அருகாமையிலுள்ள மாமாங்க குளத்தை பார்வையிட்ட ஜனாதிபதி அதன் புனர்நிர்மாணப் பணிகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஆளுநரிடம் தெரிவித்தார். அதன் பின்னர் ஆளுநரின் உத்தியோக பூர்வ இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி அவ்வளாகத்தில் மரக் கன்று ஒன்றையும் நாட்டினார். (இ-7)

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

# காலி முகத்திடலில் சுற்றுலா மையம்

(கொழும்பு)

காலி கோட்டை மற்றும் காலி முகத்திடல் என்பவற்றை மையப்படுத்தி சுற்றுலா மையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

காலி துறைமுகத்திற்கு வருகின்ற ரெவல் கப்பல்கள் சுற்றுலாத்துறையில் கவர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையில், அவற்றை சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்காக பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பை கடந்து செல்லும் சுற்றுலா கப்பல்களை கொழும்பிற்குள் ஈர்ப்பதற்கான செயற்றிட்டம் ஒன்றும் அமுல்படுத்தப்படவுள்ளது. (இ-7)

# தமிழ் மாணவர்களுக்கு தனிப் பல்கலைக்கழகம்

(கொழும்பு)

மலையகத்தில் தேசியப் பல்கலைக்கழகத்திற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வியியலாளரும் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகருமான எம்.வாமதேவன் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு 506 மாணவர்கள் மலையகத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மலையகத்துக்கான புதிய பல்கலைக்கழகம் குறித்த தேவை எழுந்துள்ளதாகவும் வாமதேவன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களை விட தற்போது மலையக மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி வீதம் குறிப்பிட்டளவு அதிகரித்து வருவதாகவும், ஆகவே மலையக மாணவர்களின் உயர்கல்வி ஆர்வத்தை அதிகரிக்கும் நோக்கில் தனியான பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம், கிழக்கு மற்றும் தென் கிழக்கு பல்கலைக்கழகங்கள் இருக்கின்ற நிலையில் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கான, இனரீதியாக தனியான பல்கலைக்கழகம் அமைக்கப்படுவது சாத்தியமற்றது என பல தரப்பாலும் கூறப்பட்டு வருகின்றது.

எனினும் இந்த பரிந்துரை இன ரீதியானது அல்ல எனவும் தேசிய ரீதியான பல்கலைக்கழகத்தையே பரிந்துரை செய்யவுள்ளதாகவும் அமைச்சின் ஆலோசகர் வாமதேவன் குறிப்பிட்டார்.

பத்தனை கல்வியியற் கல்லூரி, கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை மற்றும் ஹற்றனில் நிரந்தர கட்டடமின்றி இயங்கி வரும் திறந்த பல்கலைக்கழகத்தின் கிளை ஆகிய மூன்று நிறுவனங்கள் மாத்திரமே மலையக தமிழ் மாண வர்களுக்கு தற்போது உயர் கல்வியை வழங்கி வரு கின்றன.

அதேவேளை பல்கலைக் கழகத்திற்கு உள்வாங்கப் படும் மலையக மணவர்கள் வடக்கு- கிழக்கு என தூர இடங்களுக்கு சென்று, தங்கும் விடுதிகளில் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும், இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கும் மலையகக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கும் இந்த தேசிய பல்கலைக்கழகம் ஏதுவாக அமையும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை கல்வி வளர்ச்சியில் மலையக அரசியல் தலைவர்கள் அக்கறை கொள்வது போன்று தென் பட்டாலும் மாணவர்களின் உயர்கல்வி விடயத்தில் அரசியல்வாதிகள் கவனம் செலுத்துவதில்லை என கல் வியாளர்கள் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

கண்ணீர் அஞ்சலி



எமது கலாசாலையின்
விரிவுரையாளர்
திருமதி. சர்மிளா பாஸ்கரன்
அவர்களின் அன்புத் தந்தை
வஸ்தியாம்பிள்ளை
ஞானானந்தன்
அவர்கள் காலமானமையையிட்டுத்
துயருறும் குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள் யாவருக்கும்
எமது கண்ணீரைக்
காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

விரிவுரையாளர் கழகம்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08
11
1947

மறைவு
12
03
2012

அமரர் தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்
(எழுந்தாளர், ஓய்வுபெற்ற எழுது வினைஞர் - கல்வித்திணைக்களம்)

அன்பின் இருப்பிடமாய்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
இலக்கியத்தை போதித்த ஆசானாய்
இருந்து எமை வளர்த்த அப்பாவே
நீங்கள் மறைந்து ஐந்து ஆண்டு
ஆகிவிட்ட போதும் உங்கள் அறிவுரைகள்
காதினிலே கேட்கிறது...

கொத்தன்தறை, பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.
-குடும்பத்தினர்

(7943)

## இராசி பலன்

**மீனம்**: வரவும் செலவும் சமமாகும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபடவேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், மனச் சஞ்சலம் கூடும் நாள்.

**மேடம்**: நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**இடபம்**: குடும்பத்தில் சுபிட்சமும், சந்தோசமும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்**: நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்று தொடரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர்பார்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுக். புத | | | |
| சூரி | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரட்டாதி<br>காலை 10.37 மணிக்கு<br>துலாம்--சந் | | |
| சனி | குரு, செவ் | சந் | |

05.03.2018

மாசி 21, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

சதுர்த்தி பின்னிரவு 3.54 மணிவரை

சித்திரை முன்னிரவு 11.15 மணிவரை

சுபநேரம் 12.26-1.56 மணிவரை

இராகுகாலம் 7.56-9.26 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்,

சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்**: பெற்றோர் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெற வாய்ப்புண்டு.

**மகரம்**: எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், சான்றோர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: உறவு பகை பாராமல் உதவும் நாள், செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு**: தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும், மரியாதையும் கூடும் நாள், பயணங்கள் கைகூடி வருவதற்கான வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்**: செய்தொழிலில் தாராளம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**துலாம்**: தேசு நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**கன்னி**: சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

# பேரினவாத வக்கிரமே அம்பாறைத் தாக்குதல்

## லெனினிசக் கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நல்லாட்சி என்னும் முகமூடி அணிந்த இன்றைய கூட்டு அரசாங்கத்தின் கீழ் பேரினவாத வெறியாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதையே, அம்பாறை நகரின் முஸ்லிம் கடைகள் பள்ளி வாசல் மீதான அண்மைய தாக்குதல்களும் எரிப்புச் சம்பவங்களும் எடுத்துக் காட்டுகின்றன. சம்பவம் இடம்பெற்று சுமார் ஒரு மணி நேரம் கழித்தே பொலிஸார் அவ்விடத்திற்கு வந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன் மூலம் மேற்படி தாக்குதல் பேரினவாத நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதா என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது முஸ்லிம்கள் மீது இடம்பெற்று வந்த தொடர் தாக்குதல்களில் ஒன்றாகவே அமைந்துள்ளது. எனவே பேரினவாத வக்கிரம் கொண்ட அம்பாறைத் தாக்குதலை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு கடந்த 26ம் திகதி இரவு அம்பாறை நகரின் முஸ்லிம் கடைகள், பள்ளிவாசல் மீதான தாக்குதல், வாகனங்கள் எரியூட்டப்பட்மை பற்றி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், கடந்த காலத்தைப் போன்றே இன்றும் பேரினவாதச் செயற்பாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சட்டபூர்வமாகவும் சட்டங்களை மீறியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் நாட்டின் தமிழ்,முஸ்லிம் மலையகத் தமிழ் மக்கள் கடுமையாகன பாதிப்புகளை எதிர்கொண்டு வருகிறார்கள். நல்லாட்சி, நல்லெண்ணம், சமாதானம் போன்ற திரைகளின் பின்னால் இடம்பெற்றுவரும் பேரினவாத செயற்பாடுகளுக்கு அரசாங்கத்தில் அங்கம்வகித்து வரும் முஸ்லிம், மலையக, தமிழ் பிரதிநிதிகளோ அல்லது எதிர்க்கட்சி என்ற பெயரில் இருந்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ திடமான தமது எதிர்ப்பைக் காட்டுவதில்லை. வெறும் வாய் உபசாரத்திற்குச் சம்பவங்கள் இடம்பெறும்போது அறிக்கைகள் வெளியிட்டு விட்டு தத்தமது பதவிகளின் ஒட்டி இருந்து சுகபோகம் அனுபவித்து வருகிறார்கள். அடையாள அரசியலை உசுப்பிவிட்டு, பாராளுமன்றம் வரை சென்று தமக்குரிய பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் முஸ்லிம் தலைமைகள் சாதாரண முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பேரினவாதப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதில்லை. கொடுக்கவும் மாட்டார்கள்.

எனவே, பேரினவாதத்தை எதிர்கொண்டுவரும் சிறுபான்மைத் தேசிய இனங்கள் குறுகிய நிலைப்பாடுகளுக்கு அப்பாலான, சிங்கள உழைக்கும் மக்களோடு இணைந்து, வெகுஜனத் தளங்களில் முன் செல்வதையிட்டுச் சிந்திப்பதே பேரினவாதத்தை முறியடிப்பதற்குரிய வழிமுறையாகும். ஆளும் வர்க்க சக்திகள் ஒருபோதும் பேரினவாதத்தைக் கைவிட மாட்டார்கள். அதே போன்று தத்தமது இனங்கள் மத்தியில் இருந்து வரும் அடையாள அரசியல் சக்திகள் மக்களைக் குறுகிய நிலைகளுக்குள் வைத்துத் தமது ஆதிக்க அரசியலை முன்னெடுப்பதையே நோக்காகவும் போக்காகவும் கொண்டுள்ளனர். இதனை அனைத்துத் தரப்புகளின் உழைக்கும் மக்களும் புரிந்து கொள்வது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# உதவும் கரங்கள் அமையம்

## வாதரவத்தையில் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு வாதரவத்தை பகுதியில் உள்ள இளைஞர்களால், வாதரவத்தை உதவும் கரங்கள் அமையம் எனும் பெயரில் சமூக சேவைகள் அமையம் ஒன்று நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வாதரவத்தை மாணவர்கள் மேலதிக கற்றல் நடவடிக்கைகளுக்கு அயல் பிரதேசங்களுக்கு சென்று கற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுவதோடு, அப்பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகளும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது.

எனவே மேற்குறித்த அமையமானது, வாதரவத்தையின் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாணவர்களுக்கு ஊக்குவிப்பாக இருப்பதும், அமைப்பினூடாக மாணவர்களுக்கு கற்றல் உதவிகளை வழங்குவதை பிரதான நோக்காக கொண்டு செயற்படும் என்றும் கல்வி நிலையம் ஒன்றை அப்பிரதேசத்தில் நிறுவி, கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்றும் நேற்று தீர்மானம் எடுத்துள்ளனர்.

இந் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,நலன்விரும்பிகள் எனப் பலர் பங்கு பற்றியிருந்தனர். (இ-9)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் ந. தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ப.சசிகுமார்,கௌரவ விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக்கல்வி விளையாட்டு அபிவிருத்திசெயற்றிட்ட இணைப்பாளர் ச.சிவகாந்தி ஆகியோர் கலந்து கொள்வர். (10)

# சங்கடஹர சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்ஆலய மாதாந்த சங்கடஹர சதுர்த்தி விரதம் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் விசேட பூசைகளுடன்ஆரம்பமாகி தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வெளிவீதி வலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறும். (10)

# 10 கிலோ கஞ்சாவுடன் கைதான ஐவர் விளக்கமறியலில் வைப்பு

(கரணவாய்)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களையும் இன்று திங்கட்கிழமை (05.03.2018) வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை (01.03.2018) நெல்லியடிப் பொலிஸாரால் பத்து கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஐவரையும் கடந்த வெள்ளிக்கிழமை (03.03.2018) நீதிமன்றில் முற்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)








கானதமிழ்மணி இளையவாரியார் சின்னத்தம்பி ஸ்ரீதயாளனின் ஆய்வு நூலாகிய "இலங்கையிலும் தமிழகத்திலும் கதாப்பிரசங்கக் கலை" எனும் நூல் வெளியீட்டு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.








ஹரிகுழும நிறுவனங்களின் யாழ். நகர் அலுவலக திறப்பு விழா ஹரி குழும நிறுவனங்களின் முகாமைப்பணிப்பாளர் சோ.யாதவன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அலுவலகம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படுவதையும் முகாமைப் பணிப்பாளர் யாதவன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.





ஈவினை கற்பக விநாயகர் முன்பள்ளியின் கால்கோள் விழாவும் முன்பள்ளியில் கல்வி கற்று பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. (படங்கள்: சக்தி)



யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் யோகதயாளன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் மெய்வன்மை நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றதுடன், விருந்தினர்களால் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக செலிங்கோ லைஃப் இன்சுரன்ஸ் யாழ்.மாவட்ட முகாமையாளர் செ.கோகுலதாஸ், கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் திருநெல்வேலி கிளை முகாமையாளர் திருமதி. யாமளை தனேஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ஒருவர் வெட்டிப் படுகொலை! சகோதரர்கள் இருவர் கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - வெல்லா வெளி பிரதேசத்தில் ஆண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர் பில் சகோதரர்கள் இருவரை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு செல்வபுரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் கமலேஸ் வரன் (வயது 49) என்பவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த 19 வயது இளைஞர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையின் பின்னர் அவரது சகோதரனையும் கைது செய் தனர்.

இவ்விருவரையும் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்திய போது, எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லா வெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


## ஆயுர்வேத தயாரிப்புகளிற்கு விலைக்கழிவு!!!

சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்கும் ஆயுர்வேத தயாரிப்புகளிற்கு எம்மிடமிருந்து விசேட விலைக் கழிவுகளைப் பெற்றிடுங்கள்.

**அரிஷ்டம்**

தசமூலம்- தேக இளைப்பு, தாது விருத்தியின்மை, பலவீனத்திற்கு
அபயா - மூலத்திற்கும் மலச் சிக்கலுக்கும்
கனகாசவ- இருமல், இழுப்பு வியாதிக்கு
அசோகா - வெள்ளை படுதல், மாதவிடாய்க் கோளாறு, அதிக உதிரப் போக்கிற்கு
கதிரா - கடி, சொறி, தோல் வியாதிக்கு

**தைலம்**

பிண்ட தைலம்- வாதம், சொறி, காலில் உள்ள வெடிப்பிற்கு
மகா நாராயணத் தைலம் - வாதம், பாரிசவாதத்திற்கு
மகா சித்தார்த்த தைலம் - நெஞ்சு வலி, மூட்டு வலி, மூட்டு வீக்கத்திற்கு
Kadahapola மூலரோக சுவய- மூலரோகத்தினால் ஏற்படும் இரத்தப்போக்கு கட்டிகள் தோன்றுதல், மூலம் வெளித்தள்ளுதல், சீதம் போதல், வயிறு உப்பி கடுமையாகுதல், சிறுநீர் மஞ்சளாதல், எரிச்சல், வேதனை போன்றவற்றிற்கு வியத்தகு குணம் தரும் ஒளடதமாகும்.

**சூரணம்**

தாளிசாதி- சளி, இருமலிற்கு
அல்வகந்தா- பசியின்மை, இழந்த சக்தி மீட்சி, வீரியத்திற்கு

இதுபோன்ற பல நோய்களிற்கான அரிஷ்டம், ஆசவம், தைலம், சூரணங்கள், கூந்தல் எண்ணெய்களை எம்மிடம் சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்கும் போது விசேட விலைக் கழிவுகளை இன்று முதல் பெற்றிடுங்கள்.

குறிப்பு: சில்லறையாக வாங்குபவர்கள் மருந்துச் சிட்டையுடன் வரவும்.

தொடர்பு: சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.(சத்திரச் சந்திக்கு அருகில்)
தொ.இல: 021 222 2567


# பிரிட்டனை அச்சுறுத்தும் மர்மக்காய்ச்சல் மூன்று வாரங்களில் 230 பேர் உயிரிழப்பு



(லண்டன்)

பிரித்தானியாவில் பரவி வரும் மர்மக் காய்ச்சலினால் இதுவரை 230 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 18,000 பேர் வரையில் இந்தக் காய்ச்சலால் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும், இதில் சிலர் அபாய கட்டத்தை தாண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று வாரங்களாக இந்த மர்மக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக பிரித்தானிய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மர்மக் காய்ச்சலை கண்டறிவதற்காக விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு மக்கள் மர்மக் காய்ச்சல் குறித்து அவதானமாக இருக்குமாறும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (10)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: செவ் 2இல்<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7575 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: சூரி செவ் 8இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6749 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc/தனியார் தொழில், இந்தியா<br>தொ.இ: B/7576 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc/ USA<br>தொ.இ: G/6751 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 24<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்A/L சுவீடன் NOTPR<br>தொ.இ: B/7577 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 1இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: வணிகபட்டதாரி/ கணக்காளர்<br>தொ.இ: G/6756 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/7578 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/6761 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## அன்பு மாணவர்களே!

உங்கள் அபிமான வலம்புரியில்
பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட
தரம்-05 புலமைப்பரிசில்
மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்
எதிர்வரும்
07.03.2018 புதன்கிழமை
முதல் வெளிவரும்.

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

# ஆற்று மணல் கடத்திய வாகனங்கள் கைப்பற்று


## சாரதிகள் கைது

(மல்லாவி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் 18. மணி நேரத்தில் மூன்று வெவ்வேறு இடங்களில் வைத்து சட்டவிரோதமான முறையில் ஆற்று மணலை கடத்திச் சென்ற இரண்டு டிப்பர் வாகனத்தையும் மற்றும் ஒரு உழவு இயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதன் சாரதிகள் மூன்று பேரையும் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி வரையிலான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது கனகபுரம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆற்று மணலை கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றையும், அன்றைய தினம் பிற்பகல் 5.30 மணியளவில் கிளிநொச்சி கிருஷ்ணாபுரம் பகுதியில் வைத்து ஆற்று மணலை கடத்திச் சென்ற உழவு இயந்திரத்தையும், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரத்தில் பரந்தன் பகுதியில் வைத்து ஆற்று மணலை கடத்திச் சென்ற டிப்பர் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)



முழங்காவில் பொலிஸ் நிலையப் பிரிவில் யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியிலுள்ள பாலியாறு கிராமத்தில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர்வாகனம் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளான நிலையில் அதன் சாரதி காயங்கள் எதுவும் இன்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ள விபத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

(படம்:-மல்லாவி செய்தியாளர்)

### ரவுடிக்கும்பல் வெட்டிய சம்பவத்துக்கு எதிராக

# கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக இன்று கண்டனப் போராட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ரவுடிக் கும்பல் ஒன்று சந்தையிலுள்ள மரக்கறி கடையினுள் புகுந்து மரக்கறிக்கடை உரிமையாளர் ஒருவரை வெட்டிய சம்பவத்தைக் கண்டித்தும் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் கிளிநொச்சி பொதுச் சந்தையில் நடைபெற்ற வாள் வெட்டு சம்பவத்தையும் எதிர்த்து இன்றைய தினம் காலை பொதுச்சந்தை வளாகத்திலுள்ள பாதைகள் அனைத்தையும் மூடி கண்டனப் போராட்டம் ஒன்றை பொதுச் சந்தை முன்பாக கிளிநொச்சி பொதுச்சந்லத வர்த்தக சங்கத்தினர் நடத்தவுள்ளதாக வர்த்தகச்சங்கத்தலைவர் அ.யேசுராஜன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி சந்தையில் இதுபோன்ற பாரிய குற்றங்களில் ஈடுபடுகின்றவர்கள் பொலிஸாரிடம் தெரியப்படுத்தியும் ஒரு சில நாட்களில் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்றனர். இதனால் மீண்டும் மீண்டும் குற்றச்சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ளது.

இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுமாகில் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

கண்டனப் போராட்டத்தையடுத்து கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், அங்கஜன் இராமநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கரைச்சி பிரதேசசபை செயலாளர், கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோருக்கு மகஜர்கள் கையளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-271)



# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(பூநகரி)

கண்டாவளைபிரதேச செயலர் பிரிவின் அரச ஓய்வூதியர் நலன்புரிச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த மாதம் 27ஆம் திகதி முற் பகல் 10 மணியளவில்கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலக கணக்காளர் சி.குகதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது. இதன்படி தலைவராக இ.பத்மநாதன், உப தலைவராக க.தெய்வேந்திரம், செயலாளராக திருமதி கமலநாதன் செல்வகுமார், உப செயலாளராக தர்மகுணசீலன் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ம.பத்மநாபன். கோ. வேல்முருகு ஆகியோரும் கணக்குப் பரிசோதகராக க.வைரமுத்துவும் தெரிவு செய்யப்பட்டனர். (2-84)

# 12 மணித்தியாலங்களில் மூன்று சம்பவங்களில் 9பேர் கைதும் இருவர் வைத்தியசாலையிலும்

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட வவுனியா, புளியங்குளம், செட்டிகுளம் ஆகிய பொலிஸ் நிலையப் பிரிவுகளில் கடந்த 12 மணி நேரத்தில் மூன்று வெவ்வேறு சம்பவங்களின் போது வெடிபொருள் வெடித்த சம்பவத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையிலும், யானையால் தாக்குண்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், எரிபொருள் திருட்டில் ஈடுபட்ட 9, சந்தேக நபர்களை தடயப் பொருட்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணி தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணி வரையிலான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புளியங்குளம் புதூர் நாக தம்பிரான் கோவில் வீதி புளியங்குளம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்டு காட்டு விலங்குகளை இறைச்சிக்காக வேட்டையாடும் நோக்குடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெங்காய வெடிபொருள் வெடித்த போது குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் புளியங்குளத்தில் உள்ள புதூர் நாக தம்பிரான் கோவில் செல்லும் வீதியிலுள்ள புதூர் சந்திப் பகுதிக்கு அண்மையாக வசிக்கும் ஞானசேகரம் - ஜெயராணி வயது - 41 என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின் றார்.

இச்சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸ் நிலையப் பொலிஸார் புலன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், செட்டிகுளம் சண்முகபுரம் கிராமத்திற்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்பட்ட கறவைப் பசுக்களை மீளவும் பிற்பகல் வேளை வீட்டிற்கு கொண்டு செல்வதற்காக சென்ற குடும்பஸ்தர் ஒருவரை யானை தாக்கிய போது மயிரிழையில் உயிர் தப்பிய நிலையில் அவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணியளவில் நடைபெற்றுள்ளது,

இச் சம்பவத்தில் இலக்கம் 45, சண்முகபுரம் செட்டிகுளத்தைச் சேர்ந்த ராமசாமி - லோலகநாதன் வயது 58 என்ற குடும்பஸ்தரே யானையால் தாக்குண்ட நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வவுனியா நகரப் பகுதியில் குட்செட் வீதியில் உள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையத்திலிருந்து எரிபொருளைத் திருடி தப்பிச் செல்ல முற்பட்ட 9 பேர் கொண்ட திருட்டு குழுவை கைது செய்துள்ளதுடன் எரிபொருள் கடத்திச் செல்லப் பயன்படுத்திய வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281-250-15)

# இராணுவம் மாற்றுக்காணி கோரல் காணி வழங்குவது தொடர்பில் ஆராய்வு

## அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் இறுதி முடிபு சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள காணிகள் விடுவிப்பதற்கு இராணுவம் மாற்றுக் காணி கோரியுள்ளதாகவும் அதற்கான மாற்றுக்காணி எங்கு வழங்குவது என்பது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தலைமையில் புதுக்குடியிருப்பு காணி உரிமையாளர்கள் மற்றும் புதிதாக பிரதேச சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் கூடி கலந்துரையாடியுள்ளனர்.



இந்தக் கலந்துரையாடல் கடந்த 23ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலய வளாகத்தில் இடம்பெற்றது.

இது விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களின் ஒருமாத கால போராட்டத்தை தொடர்ந்து மக்களின் ஒரு தொகுதி காணி விடுவிக்கப்பட்டதோடு மிகுதி காணிகள் இரண்டு கட்டங்களில் 6 மாத காலத்தில் விடுவிப்பதாக இராணுவத்தினர் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக எழுத்து மூலமான உறுதி மொழி வழங்கியிருந்தனர்.

இருப்பினும் ஒருவருடமாகியும் இந்த காணிகள் விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் இராணுவம் தாம் வேறு இடத்துக்கு மாறுவதற்கு காணி கோரியிருப்பதாக அதிகாரிகள் கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தெரிவித்தனர்.

இந்நிலையில் மீண்டும் மக்கள் மத்தியில் உள்ள ஒரு காணியையே அவர்கள் கோரியுள்ள நிலையில் இந்த காணியை வழங்க முடியாது எனவும் வேறு எங்கு இதை வழங்குவது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இருப்பினும் எங்கு காணி வழங்குவது என்பது தொடர்பான இறுதிமுடிவு இங்கு எட்டப்படவில்லை. குறித்த விடயம் தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறியவே இந்த கூட்டம் கூட்டப்பட்டதாகவும் இறுதி முடிவு புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்திலேயே எட்டப்படும் எனவும் சிவமோகன் எம்.பி. தெரிவித்தார்.

இருப்பினும் பலர் இராணுவம் கோரியுள்ள காணி பொருத்தமில்லை என்பதை தெரிவித்ததோடு மக்கள் மத்தியில் உள்ள இராணுவத்தை மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டாம் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த இராணுவத்துக்கு புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதியில் பிரபாகரனது இல்லம் அமைந்துள்ள காணி அல்லது அதோடு இணைந்த காணியை அல்லது தேவிபுரம் பகுதியில் உள்ள நீச்சல் தடாகத்தோடு அண்டிய பகுதிகளை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் இறுதிமுடிவு புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலேயே எட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. (2-281)

# ஒட்டுசுட்டானில் புதையல் தோண்ட முற்பட்ட பத்துப்பேர் கைதாகினர்

## விசேட அதிரடிப்படையினர் அதிரடி நடவடிக்கை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 10 பேரை முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.50 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து உயரதிகாரிகளின் ஆலோசனைக்கமைய முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படை பிரதானி ஆனந்த பிரேமசிறியின் வழிகாட்டலில் சென்ற பொலிஸ் அணியினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது வெடிமருந்துகள் மின்பிறப்பாக்கி மற்றும் பல உபகரணங்களையும் கைப்பற்றியதோடு கைதானவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் கண்டி,நுவரெலியா, முல்லைத்தீவு,விஸ்வமடு, நிட்டம்புவ, வத்தேகம உள்ளிட்ட பகுதிகளை சேந்தவர்கள் என விசாரணைகளில் தெரிவிக்கப்படுகிறது. (2-281)

# காணாமற்போன மாணவன் காட்டில் சடலமாக மீட்பு!

## சந்தேக நபர் நாயாற்றில் கைது

(மல்லாவி)

சிலாபம் இரணவில சமிதுகம பகுதியைச் சேர்ந்த றசித் நிர்மல் என்ற 10 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் கடந்த மாதம் 25 ஆம் திகதி காணாமல் போன நிலையில் பின்னர் 27 ஆம் திகதி சிலாபம் பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சிறுவனின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள அளம்பில் நாயாறுக் கடற்கரைப் பகுதியில் உள்ள மீனவக் குடிசை ஒன்றில் வைத்து கைது செய்துள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சிறுவனின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் சிலாபம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை சிலாபம் பொலிஸார் தேடி வந்த நிலையில் அவர் தலைமறைவாகியதை அடுத்து நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சந்தேக நபர் தொடர்பில் தகவல்களை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, நேற்றைய தினம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து நாயாற்றுப் பகுதியில் வைத்து நீட் பொன்சேகா என்ற சந்தேக நபரைக்கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபரை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள நிலையில் பிரஸ்தாபநபர் தொடர்பில் சிலாபம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் சிலாபம் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-281)




# கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் கிணறுகள் வற்றியமையால் குடிநீர் பெறுவதில் மக்கள் அவதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமத்தில் குடிநீர் கிணறுகள் வற்றியுள்ள நிலையில் இங்குள்ள மக்கள் குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு கிராமத்தில் தமது பூர்வீக நிலங்களில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படாத நிலையில் 298 வரையான குடும்பங்கள் கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமத்தில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமத்தில் உள்ள 298 குடும்பங்களின் தண்ணீர்த் தேவைகளுக்கு அமைக்கப்பட்ட பொதுக் கிணறுகளும் நீர் வற்றிக் காணப்படுகின்றன.

இதைவிட ஏழு குழாய்க்கிணறுகளில் நான்கு கிணறுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இங்கு வாழும் 298 வரையான குடும்பங்களும் குடிநீர் முதல் கொண்டு ஏனைய தேவைகளுக்கான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாங்கள் சொந்த நிலத்தில் எந்த வரட்சிக் காலங்களிலும் தாக்குப் பிடிக்கக்கூடிய கிணறுகளையும் வசதிகளையும் கொண்டு வாழ்ந்த எங்களை எங்கள் நிம்மதிகளை சிதைக்கும் வகையிலும் எங்களைக் கஷ்டப்படுத்தும் வகையிலும் இவ்வாறு நலன்புரிநிலையத்தில் தங்க வைத்துள்ளனர்.

இதனால் குடிநீர் முதல் தொடங்கி தொழில் வாய்ப்பு வாழ்வாதாரம் எல்லாவற்றுக்குமே பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# உளவள ஆற்றுப்படுத்தல் பயிற்சியும் நூலகத்திற்கு புத்தகங்கள் வழங்கலும்



(பனிக்கன்குளம்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் வேள் சைல்ட் ஹொலன்ட் உடன் இணைந்து போஸ்டோ நிறுவனத்தினால் "முரண்பாடுகளின் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் உரிமைகளை அடைதலும் அதற்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தலும்" எனும் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலக பிரிவு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் அமுலாக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் குறித்த திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட உளவள ஆற்றுப்படுத்தல் பயிற்சியின் இறுதி நிகழ்வான பிரியாவிடை நிகழ்வு கடந்த 2ஆம் திகதி 3.30 மணிக்கு பனிக்கன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள உதயசூரியன் சிறுவர் கழகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டு அவர்களது திறமைகள், ஆளுமைகள் வெளிக்காட்டப்பட்டன.

இந்நிகழ்வில் சிறுவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்கோடு 135 வகையான புத்தகங்களும் கிராம நூலகத்திற்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் போஸ்டோ நிறுவன பிரதிநிதிகள்,தொண்டர்கள்,பெற்றோர் மற்றும் சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# வீடுகளுக்கான மின்னிணைப்பு வழங்கப்படவில்லை முகமாலை,இந்திராபுரம் மக்கள் மகஜர் அனுப்பிவைப்பு

(மல்லாவி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முகமாலை, இந்திராபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு ஒருவருடங்களைக் கடந்த நிலையில் பிரதான மின் இணைப்பு வேலைகள் முடிவடைந்த போதும் தமது வீடுகளுக்கான மின் இணைப்பு வழங்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித்தாய்மார்களைக் கொண்டுள்ள குடும்பங்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டு வருவதாகவும் விரைவாக மின் இணைப்பை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் மற்றும் இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையின் பிராந்திய முகாமையாளர் ஆகியோருக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் உள்ள முகமாலையில் 40, குடும்பங்களும், இந்திராபுரம் கிராமத்தில் 16 குடும்பங்களுமாக மொத்தம் 56 குடும்பங்கள் மேற்படி கிராமங்களில் கண்ணிவெடி பொருட்கள் அகற்றப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமது தற்காலிக வீடுகளுக்கு மின் இணைப்பு பெற்றுக் கொள்வதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரிடம் கோரிக்கையை மக்கள் விடுத்த போது உங்கள் வீடுகளில் மின் இணைப்பு பெற்றுக் கொள்வதற்கான வேலைகளைச் செய்யும் படியும் மின்சாரசபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மின் இணைப்பைப் பெற்றுத் தருவதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மக்கள் தமது வீட்டுக்கான மின் இணைப்பு வேலைகளைச் செய்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் பிரதான மின் இணைப்புக்கான தூண்கள் நடப்பட்டு மின் கம்பிகளும் பொருத்தப்பட்டு வேலைகள் முடிவடைந்து பல மாதங்களாகியும் இன்னும் தமக்கான வீட்டுக்குரிய மின்னிணைப்புக்களை மின்சார சபையினர் வழங்கவில்லை.

இதேவேளை, மீள்குடியேறிய குடும்பங்களில் தற்போது இந்திராபுரத்தில் 6 நிரந்தர வீடுகளும் மற்றும் முகமாலையில் 15 வரையான நிரந்தர வீடுகளும் மக்கள் அமைத்துள்ளனர்.

மீள் குடியேற்றம் செய்யப்பட்டு ஒரு வருடங்களைக் கடந்த நிலையில் தங்களது பாடசாலை செல்லும் பிள்ளைகள் மின்சாரம் இல்லாத நிலையில் விளக்கு வெளிச்சத்தில் கல்வி கற்றல் நடவடிக்கைகளை தொடர்வதுடன் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தமது பிள்ளைகள் கணனியைப் பயன்படுத்தி மீட்டல் பயிற்சிகளை செய்வதற்கு மின்சாரம் இன்றி பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

எனவே உரிய தரப்பினர் இது தொடர்பில் கவனம் எடுத்து தமக்கு மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# வவுனியா தமிழ் மாமன்றத்தின் தமிழ் மாருதம் நிகழ்வு

(குருமன்காடு)

வவுனியா தமிழ் மாமன்றத்தின் தமிழ் மாருதம் 2018 நிகழ்வு எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் காலை மற்றும் மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இந்த வருடமும் "தமிழ் மாருதம் 2018" எனும் தமிழ் மாமன்றத்தின் நூல் பல்வேறுபட்ட துறைகளைச் சேர்ந்தவர்களின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

வயலின் இசை, கரகம், சுழலும் சொற்போர் கோலாட்டம், வில்லுப்பாட்டு, பட்டி மன்றம், வாத்திய பிருந்தா, கோவலன் கூத்து, விவாத அரங்கு, உடுக்கு இசை, நாடகம், கவியரங்கம் மற்றும் நாட்டிய நாடகம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன .

வருடாந்தம் பிரமாண்டமான முறையில் இடம்பெற்று வரும் இந்நிகழ்வு இம் முறையும் கலைஞர்கள் , கலை ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக இடம்பெறவுள்ளது. (2-250)

# பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் இலங்கை அரசாங்கம் தோல்வி

## உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை செயற்படுத்த இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதென உலகத் தமிழர் பேரவை சுட்டிக் காட்டியுள்ளது. இவ்வாறான நிலையில், அதனை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது கூட்டத்தொடர் கடந்த வாரம் ஆரம்பமாகி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில், இலங்கை தொடர்பில் உலகத் தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் உள்ளடங்கும் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் போதிய முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவில்லையென சுட்டிக்காட்டியுள்ள உலகத்தமிழர் பேரவை, இலங்கையில் முழுமையான நிலைமாறுகால நீதிப் பொறிமுறை கோரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கி இரண்டரை ஆண்டுகளாகி விட்டன. ஆனபோதிலும் தனது அர்ப்பணிப்புக்களிலோ நோக்கங்களிலோ நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு எத்தகைய அர்த்தபூர்வமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதென சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு, காணாமல் போனோர் அலுவலகம் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட போதிலும், கடந்த வாரமே அதற்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். அரசியலமைப்பு மறுசீரமைப்பு பணிகளும் முடங்கியுள்ளன. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகளின் பிரகாரம் மீண்டும் கடும்போக்காளர்கள் ஆட்சிக்கு வருவதற்கான சமிக்ஞை மேலெழுந்துள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு, இலங்கை மீது சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரிக்கப்பட வேண்டுமென உலகத்தமிழர்பேரவை வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, புலம்பெயர் தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக சர்ச்சைக்குள்ளான நிலையில் அண்மையில் இலங்கைக்கு திரும்பியழைக்கப்பட்ட பிரித்தானியாவிற்கான இலங்கையின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் குடும்பத்தாரை பிரிட்டனில் இருந்து திரும்பியனுப்ப உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரித்தானிய அரசாங்கத்திடம் உலகத்தமிழர் பேரவை கடந்த வாரம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அம்பாறையில் வன்முறை பொலிஸாரின் அசமந்தம் குறித்து பூரண விசாரணை

## சட்டம் ஒழுங்கு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அம்பாறை வன்முறைச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொள்ள மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தின் போது நீதியை நிலைநாட்டும் போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட B அறிக்கை பூரணமற்றது என தகவல் வெளியாகியுள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவத்தால் பாதிப்புக்குள்ளான தனியார் உடைமைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசலை புனர்நிர்மாணம் செய்ய விரையில் நட்டஈடு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் பங்கெடுக்கும் அனைவருக்கெதிராகவும் தராதரம் பாராது சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்" என சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பிரதமருக்கு எதிரான பிரேரணை அடுத்தவாரம் சபாநாயகருக்கு

## கூட்டு எதிரணி விடாப்பிடி



Shehan Semasinghe
@ShehansaShehan

Hopefully much awaited No-Confidence motion against PM Wickremesinghe likely to be handed over to the Speaker next week

9:19 AM - Mar 4. 2018

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்த வாரமளவில் சபாநாயகரிடம் சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் நேற்று இதனைப் பதிவிட்டுள்ளார். (இ-7)

# தொழிலாளர்களுடன் தொடர்புடைய பல சட்டங்களில் திருத்தம்—அரசாங்கம்



(கொழும்பு)

இலங்கையின் தொழிற் சட்டங்களை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமகாலத்தில் ஊழியர்கள் எதிர்கொள்ளும் தேவைகளைக் கருத்திற்கொண்டு சட்டதிட்டங்களை திருத்த உள்ளதாக தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதன்கீழ், பிரசவ கூட கட்டளைச் சட்டம், யாப்பு மற்றும் அலுவலக ஊழியர் சட்டம், தொழிலாளர் இழப்பீட்டுக் கட்டளைச்சட்டம், சம்பள கட்டுப்பாட்டுச் சபை கட்டளைச் சட்டம், ஊழியர் சேமலாப நிதிய சட்ட திட்டங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன. (இ-7)

# 78 இலட்சம் பெறுமதியான வெளிநாட்டுப் பணத்துடன் சீன நாட்டுப் பிரஜை கைது!



(கொழும்பு)

78 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுபணத்தொகையினை சட்டவிரோதமான முறையில் தாய்லாந்திற்கு கொண்டு செல்ல முயன்ற சீன நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று அதிகாலை கட்டுநாய்க்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிபவர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# குளியலறைக்குள் புகுந்த பிக்கு

(கேகாலை)

வீட்டில் குளியல் அறையில் குளித்துக்கொண்டிருந்த பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டில் பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கேகாலை புவக்தெனிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் தனது வீட்டில் குளித்துக்கொண்டிருந்த போது, அந்த வீட்டுக்கு அருகிலுள்ள விகாரையொன்றை சேர்ந்த பிக்கு சென்றுள்ளார்.

அந்தப் பெண்ணை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்த போது அந்த பெண் அவரிடமிருந்து விடுபட்டு அது தொடர்பாக வீட்டாருக்கு அறிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தில் பிக்குவை கைது செய்துள்ளனர். (இ-7)

# சீன சில்லறை விற்பனை நிலையங்களுக்கெதிராக உள்ளூர் வர்த்தகர்கள் மீண்டும் போர்க்கொடி

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டவர்களுக்கு சொந்தமான அல்லது வெளிநாட்டவருடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள அதிலும் குறிப்பாக சீனர்களுக்கு சொந்தமான சில்லறை விற்பனை நிலையங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த வாரத்தில் இலங்கையிலுள்ள உள்ளூர் கைத்தொழிலாளர்கள், சில்லறை விற்பனை நிலைய உரிமையாளர்கள் இணைந்து திட்டமிடப்பட்டிருந்த ஆர்ப்பாட்டமொன்று ஜனாதிபதியின் தலையீட்டையடுத்து இறுதிநேரத்தில் கைவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சீன வர்த்தகர்களுக்கு எதிராக பாரிய போராட்டம் ஒன்றை உள்ளூர் வர்த்தகர்கள் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

உரிய ஒழுங்குவிதிகளோ அல்லது கண்காணிப்புக்களோ இன்றி வெளிநாட்டவர்களின் முதலீடுகள் தொடர்பாக ஏற்கனவே அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் கொள்கைகளால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக உள்ளூர் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.




கொழும்பு மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் சீனர்களுக்குச் சொந்தமான சில்லறை விற்பனை நிலையங்கள் திடீரென அதிகரித்துள்ளமை தொடர்பாக உள்ளூர் கைத்தொழிலாளர்களும் சில்லறை விற்பனை நிலைய உரிமையாளர்களும் தனது கவனத்திற்கு கொண்டு வந்ததாக கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி அவதானத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இலங்கையில் வியாபாரத்தை ஆரம்பிக்கவேண்டுமானால் வெளிநாட்டவர்கள் ஆகக்குறைந்தது ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் (அண்ணளவாக 15 கோடி ரூபா) முதலீடு செய்ய வேண்டும் என தற்போதுள்ள விதிமுறை உள்ளூர் சந்தையை பாதுகாக்கும் நோக்கில் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக (அண்ணளவாக 75 கோடி ரூபா) என அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய முதலீட்டு ஊக்குவிப்புச் சபை சட்டத்தின் 16 ஆவது சரத்தின் கீழ் இலங்கையில் வர்த்தக முயற்சியொன்றை ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டவர்கள் ஆகக்குறைந்தது 250,000 அமெரிக்க டொலர்களை முதலிட்டால் போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது முற்றுமுழுதான நேரடி வெளிநாட்டு முதலீடாகவோ அன்றேல் உள்ளூரிலுள்ள பங்காளருடன் இணைந்த கூட்டு முயற்சியாகவோ இருக்க முடியும்.

சட்டத்தில் இப்படிக் கூறப்பட்டிருந்தாலும் எதிர்பார்த்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைக்காமையால் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகள் எவ்வளவாக இருப்பினும் அதற்கு பச்சைக்கொடி காண்பித்துவிடுவதாக உள்நாட்டு வர்த்தகர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். சீனா போன்ற பெரும் முதலீட்டு வளமுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள் இரண்டு நாட்களுக்குள்ளாகவே சில்லறை விற்பனை நிலையங்களை ஆரம்பித்துவிடுவதுடன் பெருமளவான உற்பத்திப்பொருட்களை தமது நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்துவருவதால் உள்ளூர் சில்லறை மற்றும் நடுத்தர விற்பனையாளர்களால் தாக்குப்பிடிக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# காணாமல் போனோர் தொடர்பில் இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## அமைச்சர் மங்கள வேண்டுகோள்

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்திற்கான ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிப்பதற்கு சமகால நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை அரசாங்கத்திற்கு கிடைத்த பாரிய வெற்றியாகுமென்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் 2016ம் ஆண்டில் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடிந்தது. இந்த அலுவலகம் கடந்த மாதம் முதல் செயற்பட்டு வருகின்றது.

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான விடயங்களைக் கண்டறிந்து, அது தொடர்பான சிபார்சுகளை மேற்கொள்வதே இந்த அலுவலகத்திற்கு உள்ள முக்கிய பொறுப்பாகும்.



இது தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையில்,

1980ம் ஆண்டு முதல் காணாமல் போனோர் தொடர்பான விடயங்களுடன் தாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு 1980ம் ஆண்டு முதல் காணாமல் போனோர் குறித்து, முக்கிய தகவல்களைப் பெற்றுக் கொடுத்து காணாமல் போனோரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், தாமும் செயற்பட்டதாக அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த முயற்சி வெற்றி பெறுவதற்காக, அன்னையர் முன்னணி அமைப்பு என்ற பெயரில் அமைப்பொன்றும் அமைக்கப்பட்டது. அதன் இணை அமைப்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தாமும் செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் மகிந்த ராஜபக்ஷ தற்போது படைவீரர்களை பணயமாக பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டி இதற்கு எதிராக செயற்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் ஒரு தரப்பினருக்கு வரையறுக்கப்பட்டதல்ல. 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட படைவீரர்கள் கடந்த காலங்களில் காணாமல் போயிருந்தனர். இவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கும் நீதியை நிலைநாட்டுவதே இந்த பணியகத்திற்கு உள்ள பொறுப்பாகும். இதனால் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சி இதுவல்ல. இன, மதம், பிரதேச வேறுபாடுகளின்றி காணாமல் போனோர் தொடர்பான குடும்ப அங்கத்தவர்கள் எதிர்கொண்ட சிரமங்களுக்குத் தீர்வை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

எனவே இன பேதங்களுக்கு அப்பால் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# இந்து மயானம் ஆக்கிரமிப்பு

# கைதான 23 தமிழர்களும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்

## கோடீஸ்வரன் கோரிக்கை

(அட்டப்பள்ளம்)

அட்டப்பள்ளம் இந்து மயான ஆக்கிரமிப்பால் அம்பாறை மாவட்ட ஒட்டு மொத்த தமிழ் மக்களும் கொந்தளித்துள்ளனர். இச் செயற்பாடு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அம்பாறை நிந்தவூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அட்டப்பள்ளம் தமிழ் மக்களின் மயான பூமி அபகரிப்பு முறுகல் நிலையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 23 தமிழ் இளைஞர்களின் நிலை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அட்டப்பள்ளம் கிராமம் முற்றிலும் தமிழர்கள் வாழ்ந்த பழம்பெரும் பிரதேசம். இவ்வாறு பரம்பரையாக இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த பல தமிழ் மக்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்செயல் நடவடிக்கையின் காரணமாக கிராமத்தை விட்டு வெளியேறப்பட்டனர்.

ஆயினும் பல குடும்பங்கள் கிராமத்தை விட்டு வெளியேறாது இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர். அதே போல் கிராமத்தின் கடற்கரையை அண்டியதான பிரதேசத்தில் அமைந்துள்ள காணியை சோழர் காலம் தொடக்கம் மயானமாக பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மயானத்தைக்கூட விட்டு வைக்க முடியாது மனிதாபிமானமற்ற ரீதியில் மயானத்தையும் தனது பூமி எனக் கூறி அதனைப் பெறுவதற்கு கடந்த பல வருடங்களாக ஒருவர் முயற்சிக்கின்றார். சடலங்கள் புதைக்கப்பட்ட புதை குழிகளுக்கு மேலாக வேலியைப் போட்டு மனசாட்சி அற்ற செயற்பாட்டையும்மேற்கொண்டுள்ளார்.

மக்களின் பல எதிர்ப்புக்கு மத்தியில் அவரது முயற்சி நிறைவுறாத நிலையில் சமரசப் பேச்சுவார்த்தை என மக்களை அழைத்த நிந்தவூர் உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள் அட்டப்பள்ளத்துக்கு சென்று ஆலய தலைவர் உள்ளிட்ட மக்களை அழைத்து பேசியுள்ளனர்.

நீதிமன்றத்தின் உத்தியோகத்தர்கள் எவரும் சம்பந்தப்பட்ட இடத்திற்கு வருகை தராத நிலையில் காணி தொடர்பிலான பிணக்கைத் தீர்க்க அதிகாரமில்லாத உதவிப் பிரதேச செயலாளர் அழைத்த போது தமது மயானத்தை விட்டுக்கொடுக்க முடியாது எனக் கூறிய மக்கள் எதிர்ப்பினை வெளியிட்ட நிலையிலேயே வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த 23 அப்பாவித் தமிழ் மக்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

ஆகவே ஜனாதிபதி, பிரதமர் நல்லிணக்க அமைச்சு உள்ளிட்டவர்கள் இவ்விடயம் தொடர்பில் தலையீடு செய்து கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்வதுடன், தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இல்லையேல் அம்பாறை மாவட்டம் மட்டுமல்லாது இலங்கையில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய நிலை உருவாகலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இம்மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி ஜப்பான் பயணம்

## அந்நாட்டு ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம்மாத நடுப்பகுதியில் ஜப்பானுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, பிராந்தியத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பை தடுக்கின்ற ஒரு முயற்சியாக இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக் கொள்ளும் தனது அர்ப்பணிப்பை ஜப்பான் உறுதிப்படுத்தவுள்ளது என ஜப்பானில் இருந்து வெளியாகும் Nikkei Asian Review என்ற ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை ஜப்பானுக்கான அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜப்பானிய அரசர் அகிஹிடோ மற்றும் பேரரசி மிசிகோ ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதியைச் சந்திக்கும் போது பொருளாதாரத் துறையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே உறுதிப்படுத்த வாய்ப்புகள் உள்ளன என்றும் சுதந்திரமான திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும், Nikkei Asian Review தெரிவித்துள்ளது. (இ-7)

# 12 பாதாள உலகத்தினர் கைது

(கொழும்பு)

கடந்த ஒருவார காலப் பகுதியில் பாரிய குற்றங்களுடன் தொடர்புடைய 12 பாதாள உலகத்தினர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் சிலர் பாதாள உலகக் குழுக்களை வழிநடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாதாள உலகத்தினரை கட்டுப்படுத்துவதற்கு விசேட சுற்றிவளைப்பு பணிகள் ஆரம்பமாகின.

இந்த சுற்றிவளைப்பினை பொலிஸ் அதிரடிப்படை மற்றும் மது ஒழிப்பு பிரிவு என்பன இணைந்து மேற்கொண்டிருந்தன.

இதனை தொடர்ந்து பாதாள உலகத்தினரின் எழுச்சி மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன், தேர்தல் காலங்களில் மீண்டும் பாதாள உலகத்தினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில், பாதாள உலகத்திற்கு எதிரான சுற்றி வளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# அரசின் எதிர்சக்திகளே ஒன்றுபடுங்கள்

# கூட்டு எதிர்க்கட்சி திறந்த அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான சகல தரப்பினரையும் தங்களுடன் ஒன்றிணையுமாறு கூட்டு எதிர்க்கட்சி திறந்த அழைப்பொன்றை விடுத்துள்ளது.

நாளை மறுதினம் 7 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறும் கூட்டு எதிர்க்கட்சியின் பொதுக்கூட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அக்கட்சி அழைத்துள்ளது.


பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். அரசாங்கத்துக்கு எதிரான பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலைத்தேய நாடுகளுடனும், இந்தியாவுடனும் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளின் பிரகாரம் தற்பொழுதுள்ள அரசியல் தலைவர்களுக்கு பிரிந்து செயற்பட முடியாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் பிரசன்ன மேலும் தெரிவித்தார்.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள பொதுக்கூட்டம் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# பாரதம்

## மெரீனாவிலுள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுத் தற்கொலை



(சென்னை)

சென்னை மெரீனாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

முன்னாள் முதல் அமைச்சரான மறைந்த ஜெயலலிதாவின் நினைவிடம் சென்னை மெரீனாவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பாதுகாப்பு பணியில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலைக்கு முயற்சித்தார்.

இதனை தொடர்ந்து குறித்த நபரை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்தார். குறித்த நபர் மதுரையை சேர்ந்த அருள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர். (10)

## வருடாந்தம் இலட்சம் பேரைக் கொலை செய்யும் அமெரிக்கா தான் உலகின் மிகப்பெரிய தீவிரவாதி

### மும்பைத் தாக்குதல் சூத்திரதாரி ஹபீஸ் சயித் அல்

(லாகூர்)

கடந்த வெள்ளிக்கிழமை ஆற்றிய சொற்பொழி வில் உலகின் மிகப்பெரிய தீவிரவாதியாக ஐக்கிய அமெரிக்கா உள்ளது என தெரிவித்துள்ளார்.

மும்பை மாநகரில் 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10 பேர் நுழைந்து, 10இக்கும் மேற்பட்ட இடங்களில் பயங்கர தாக்குதல்கள் நடத்தினர்.

இந்த தாக்குதல்களில் 166 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். தாக்குதல்களை, பாகிஸ்தானில் இருந்து கொண்டு மூளையாக செயற்பட்டு வழிநடத்தியவர், சர்வதேச தீவிரவாதி ஹபீஸ் சயீத் லஷ்கர் இ தொய்பா மற்றும் ஜமாத் உத்தவா ஆகிய தீவிரவாத அமைப்புகளின் நிறுவனரும் ஆவார்.

மும்பை தாக்குதலை தொடர்ந்து இவரை சர்வதேச தீவிரவாதி என ஐ.நா. பாதுகாப்பு சபை பிரகடனம் செய்தது. மேலும், அவரது தலைக்கு அமெரிக்கா சுமார் ரூ.65 கோடி விலை வைத்து உள்ளது.



மார்கஸ் ஹபீஸ் சயீத் அல் கத்ஸியாவில் கடந்த வெள்ளிக்கிழமை சொற்பொழிவு நிகழ்த்தினார். அப்போது உலகின் மிகப்பெரிய பயங்கரவாதியாக ஐக்கிய அமெரிக்கா உள்ளது.

அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உதவுகிறது. உலகின் மிகப்பெரிய தீவிரவாதி, ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கானோரை கொலை செய்வதில் யார் ஈடுபட்டு உள்ளார்.

இப்போது தீவிரவாதிகளுக்கு உதவியளிப்பவர்களையும் கைது செய்யப்பட வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் உள்ள மக்களைக் கொல்ல பாகிஸ்தானில் இருந்து ஆளில்லா விமான தாக்குதல்களை நடத்த பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு உதவுகிறது. பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் அமெரிக்கா மகிழ்ச்சியடைந்ததாக கருதுகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் அதன் தோல்விக்கு பாகிஸ்தான் தான் காரணம் என கூறிக் கொண்டு அமெரிக்கா 33 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்குகிறது.

ஆப்கானிய தலிபான் மற்றும் ஆப்கான் முஜாஹிதீன் ஆகியோரும் அமெ ரிக்காவின் தோல்விக்கு பொறுப்பேற்கவில்லை. கட்டாரில் அமெரிக்கா அலுவலக த்தை திறந்து தலிபானை தங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் படி கேட்டார்கள்.

ஜமீாத் உத்தவா வின் மஜித் (மசூதிகள்), மதராசாஸ் (மதப்பள்ளிகள்) மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும், அம்புலன்ஸ்கள் ஆகியவற்றை கட்டுப்பாட்டில் எடுக்க சொத்துக்களை கைப்பற்ற இப்போது ஒரு உத்தரவை வெளியிட்டது.

அமெ ரிக்கா பாகிஸ்தானில் ஜமாத் உத்தவாவின் பெயரைக் காண விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## என்னை நாடிவந்த புதுவை எம்.எல்.ஏக்கள் திடீரென காணாமல் போய்விட்டனர் - தினகரன்

(புதுச்சேரி)

என்னிடம் வந்த புதுவை எம்.எல்.ஏ.க்கள் திடீரென காணாமல் போய் விட்டதாக ஆர்.கே.நகர் தொகுதி எம். எல். ஏ. டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

புதுவையில் உள்ள ஒரு ஹோட்டலில் ஓய்வு எடுத்த டி.டி.வி. தினகரன் எம்.எல்.ஏ. ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது,

ஒட்டன் சத்திரத்தில் ரூ.ஆயிரத்து 300 கோடியில் வீதி அமைக்க உலக வங்கியில் கடன் பெற்று டெண்டர் விட்டு பணி ஆணை வழங்கப்படவுள்ளது. இதில் ஊழல் நடந்துள்ளதாக வெற்றி வேல், தங்க தமிழ்செல்வன் புகார் தெரிவித்தனர். அதற்கு பதிலளிக்காமல் அவர்களை தேடப்படும் குற்றவாளிகளாக அறிவித்திருப்பது நல்லதல்ல.

மக்கள் இந்த ஆட்சி வேண்டாம் என்று நினைக்கின்றனர். அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும். இதற்கு பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஆனால், ஆட்சியை நடத்தினால் போதும் என ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள். 'நித்ய கண்டம், பூரண ஆயுசு' என்ற நிலையில் இந்த ஆட்சி உள்ளது.

புதுவை ராஜ்யசபா எம்.பி. கோகுலகிருஷ்ணன் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் என்னிடம் வந்தனர். ஆனால், திடீரென காணாமல் போய் விட்டனர். அவர்கள் தற்போது என்னிடம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.கவில் டி.டி.வி. தினகரன் அணி தனியாக பிரிந்த போது, புதுவை அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மற்றும் கோகுலகிருஷ்ணன் எம்.பி. ஆகியோர் டி.டி.வி. தினகரனை சந்தித்தது குறிப்பிடத்தக்கது. (10)

## ஈழத்தமிழர்கள் முற்று



## டுபாய் புளூவாட்ட உலகின் பெரிய இரா

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கு இணையாக அனைத்து பிரமாண்ட உட்கட்டமைப்புகளை கட்டி வரும் டுபாயில் உலகின் மிப்பெரிய இராட்சத இராட்டினம் அமைக்கப்பட்டுள்ளது.

உல்கில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பயணம் செய்ய விரும்பும் முக்கிய பொழுதுபோக்கு சாதனம் இராட்டினம். திருவிழாக்கள், கண்காட்சிகள் என்று அல்லாமல் சில இடங்களில் இராட்டினங்கள் நிரந்தமாக அமைக்கப்பட்டு தினந்தோறும் மக்களை மகிழ்ச்சிப் படுத்தி வருகின்றன.

டுபாய் ஜுமைராவில் அய்ன் டுபாய் (பழைய டுபாய் 1 பகுதி) எனப்படும் பகுதியில் டுபாய் ஆட்சியாளர் ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் உத்தரவின்படி 1.6 கிலோ மீற்றர் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 'புளூ வாட்டர் தீவு' என்ற பெயரில் செயற்கை தீவு அமைக்கப்பட்டு வருகிறது.

இங்கு பல்வேறு அலுவலகங்கள், குடியிருப்புகள் என பல்வேறு உட்கட்டமைப்புகளுடன் புதிய நகரம் உருவாகி வருகிறது. இந்த பகுதியில்தான் உலகின் மிகப்பெரிய 'டுபாய் அய்ன்' என்ற இராட்சத இராட்டினம் அமைக்கும் திட்டம் செயற்படுத் தப்பட்டு வருகிறது. பிரமாண்டமாக உருவாக்கப்பட்டு வரும் இந்த ராட்சத இராட்டினம் பல்வேறு சிறப்பம் சங்களை கொண்டதாக உள்ளது.

கடந்த 2015-ம் ஆண்



டில் இதன் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டன. இந்த இராட்சத இராட்டினம் மொத்தம் 9 ஆயிரம் தொன் எடை கொண்டதாக உள்ளது. இது 8 'ஏர்பஸ்' விமானங்களின் எடைக்கு சமமாகும்.

மேலும் இராட்டினத்தின் பிரமாண்ட சக்கரத்தின் அச்சு 130 அடி நீளமும் 65 அடி அகலமும் கொண்டது. இதன் எடை 1,800 தொன்கள் ஆகும். இந்த

## அமெ. பனிப்புயலில் இருளில் மூழ்கியது கிழ

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கிழக்கு கடலோர மாகாணங்களை பனிப்புயல் தாக்கியதில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் பல மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பனி பெய்து கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் கிழக்கு கடலோர மாகாணங்களான நியூஜெர்சி, நியூயோர்க், மசாசுசெட்ஸ், வடக்கு கரோலினா, தெற்கு கரோலினா, நியூ ஹேம்ஷையர், மேரிலாண்ட், ரோடே தீவுகள் ஆகியவற்றின் பல்வேறு நகரங்களை பனிப்புயல் நேற்று முன்தினம் பலமாக தாக்கியது.

மணிக்கு 65 கிலோ மீற்றர் முதல் 100 கி.மீ வேகத்தில் காற்றும் வீசியது. பனிமழையும் கொட்டியது. இதனால் சுமார் 1 அடி உயரத்துக்கும் மேலாக வீதிகளிலும் வீட்டின் மேற்கூரைகளிலும் பனி தேங்கியது.

கடற்கரையோர நகரங்களில் சூறாவளி காற்றினால் மழை பெய்தது. இதனால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்ததுடன் வெள்



ளமும் கரைபுரண்டு ஓடியது. மசாசுசெட்ஸ் மாகாணத் தின் வாட்டர் டவுன் நகரில் நூற்றுக் கணக்கான மின்கம்பங்கள் அடியோடு சாய்ந்து விழுந்தன.

இந்த பனிப்புயல், மழை, வெள்ளத்தில் சிக்கி இதுவரை அமெரிக்காவில் 5 பேர் பலியாகி விட்டனர்.

இதற்கிடையே, நியூயோர்க் நகரில்

# ...ற்றுகைப் போராட்டம்




**இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாக இங்கிலாந்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ் மக்கள் கைகளில் புலிக்கொடிகளையும் பதாதைகளையும் ஏந்தியபடி இது எமக்கான சுதந்திரம் இல்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களை கொலை செய்யப் போவதாக இலங்கைப் படையதிகாரி ஒருவர் அச்சுறுத்தியுள்ளார். அச்சுறுத்திய படை அதிகாரிக்கு எதிராகவும் பிரித்தானியாவில் மாபெரும் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.**

# ...டரில் உருவாகும் ...ராட்சத இராட்டினம்



...மைய அச்சு அமைப்பு மட்டும் நான்கு 'ஏர்பஸ் 380' ரக விமானத்தின் அளவிற்கு சமமானது. இந்த அச்சில் இருந்து வெளிப்புற சக்கரத்தை இணைக்க 192 குழாய்கள் போன்ற தடித்த கம்பிகள் பயன்படுத்தப்பட்டு பிரமாண்ட சைக்கிள் சக்கரம் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பிரமாண்ட சக்கரத்தின் மைய அச்சில் இருந்து 413 அடி நீளமுள்ள பெரிய கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த இராட்சத இராட்டினமானது தரையில் இருந்து 689 அடி உயரமுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் கடந்த 2016ம் ஆண்டில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள 'நியூயோர்க் வீல்' என்ற இராட்சத இராட்டினமே உலகின் மிகப்பெரிய இராட்டினமாக சாதனை புத்தகங்களில் பதிவாகி உள்ளது.

இதன் உயரம் 623 அடி உயரமாகும். அதேபோல அதற்கு அடுத்தபடியாக இங்கிலாந்து நாட்டில் உள்ள 'லண்டன் ஐ' என்ற இராட்சத இராட்டினம் 443 அடி உயரம் கொண்டதாக உள்ளது.

தற்போது டுபாயில் உருவாக்கப்பட்டு வரும் இந்த இராட்சத இராட்டினம் முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்டால் பல்வேறு சாதனை புத்தகங்களில் இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

பிரமாண்ட இராட்சத இராட்டினத்தில் ஒருமுனையில் இருந்து மறுமுனைக்கு செல்ல அதாவது ஒரு முறை சுற்றி வர 48 நிமிடங்கள் தேவைப்படும். இராட்டினத்தில் அமர்ந்துகொண்டு 360 டிகிரி கோணத்தில் டுபாயின் அழகை கண்டு ரசிக்கலாம்.

தற்போது இந்த இராட்டினத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

இந்த ஆண்டுக்குள் பொதுமக்களுக்காக இராட்டினம் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-10)

# வானில் மறைந்த மலேசிய விமானம் நேற்றுடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தி

(கோலாலம்பூர்)

மலேசியாவுக்குச் சொந்தமான எம்.எச்.370 விமானம் காணாமல் போய் 4 வருடங்கள் பூர்த்தியாகவுள்ள நிலையில், நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி, மலேசியத் தலைநகர் கோலாலம்பூரிலிருந்து சீனாவின் தலைநகர் பீஜிங் நோக்கி 239 பேருடன் புறப்பட்ட மேற்படி விமானம் திடீரெனக் காணாமல் போயிருந்தது.

இந்த விமானத்தைத் தேடும்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோதும், இதுவரையில் விமானம் தொடர்பாகவோ, விமானத்தில் பயணித்தவர்கள் தொடர்பாகவோ எதுவித தகவலும் உறுதிப்படுத்தப்படவில்லை.



இதற்கிடையில், இந்த விமானம் கடத்தப்பட்டிருக்கலாமென்று சில ஆய்வாளர்கள் சந்தேகம் வெளியிட்டிருந்த அதேவேளை, கிழக்கு ஆபிரிக்கக் கரையோரத்திலும் இந்திய சமுத்திரத்திலும் விமானங்களின் சில பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இருப்பினும், இந்த விமானப் பாகங்கள் காணாமல் போன எம்.எச். 370 விமானத்தின் பாகங்களா என்பது தொடர்பாக சரியான தகவல்கள் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது.

மாயமான விமானம் கண்டுபிடிக்கப்படுமென்று தாம் நம்புவதாக, விமானத்தில் பயணித்தவர்களின் உறவினர்கள் தெரிவித்திருந்தனர். (10)

# ...ல் 5 பேர் பலி ...கிழக்கு பாஸ்டன்



உள்ள விமான நிலையங்களில் நேற்று முன்தினம் முற்றிலும் விமான சேவை இரத்து செய்யப்பட்டது. இதனால் 3 ஆயிரத்துக்கும் அதிகமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானங்களின் சேவை முடங்கியது. மேலும் 2,400 விமானங்களின் வருகை தாமதம் ஆனது.

இதேபோல் பனிப்புயல், வெள்ளம் தாக்கிய மாகாணங்களில் பயணிகளின் பாதுகாப்பு காரணம் கருதி ஆம்டிராக் புகையிரத சேவையும் நிறுத்தப்பட்டது.

வடக்கு கடலோர பகுதிகளில் உள்ள 14 மாகாணங்களிலும் சுமார் 15 இலட்சத்துக்கும் அதிகமான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

தொடர்ந்து 2-வது நாளாக இப்பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன. தலைநகர் வோஷிங்டன் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டது. (10)

# சிரியாவிற்கு இரசாயன ஆயுத உதவியா?

## வடகொரியா மறுப்பு

(பியாங்யாங்)

சிரியாவில் ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கு இரசாயன ஆயுத உதவிகள் வழங்குவதாக வடகொரியா மீது ஐ.நா. புகார் அளித்திருந்த நிலையில், அதனை வடகொரியா கண்டித்துள்ளதோடு மறுப்பும் தெரிவித்துள்ளது.

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுப்போரில் ஜனாதிபதி ஆதரவு படையினர் கடந்த இரண்டு வாரமாக கிளர்ச்சியாளர்களை குறிவைத்து கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

ரஷ்யா - சிரிய ஜனாதிபதி ஆதரவு படையினர் நடத்தும் தாக்குதலில் இதுவரை 600 -க்கும் மேற்பட்ட மக்கள் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




4 இலட்சம் மக்கள் கிழக்கு கூட்டா பகுதியில் இன்னும் வெளியேற முடியாத நிலை உள்ள நிலையில், 30 நாள் போர் நிறுத்தம் செய்ய ஐ.நா. ஒப்புதல் அளித்தது.

ஆனால், அதனை அமுல்படுத்தாத ரஷ்யா - சிரிய ஜனாதிபதி ஆதரவு படை தினமும் 5 மணிநேரம் தாக்குதல் இருக்காது என அறிவித்தது. இந்த நேரத்தில் மக்கள் வெளியேற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இதற்கிடையே, சிரிய ஜனாதிபதி ஆதரவு படையினருக்கு வடகொரியா இரசாயன ஆயுதங்கள் கொடுப்பதாக ஐ.நா குற்றம் சாட்டியது. இதனை அடுத்து, அமெரிக்காவும் ஐ.நாவின் குற்றச்சாட்டை ஆமோதித்தது. இந்நிலையில், ஐ.நாவின் குற்றச்சாட்டை வடகொரியா மறுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள வடகொரிய வெளியுறவு செய்தி தொடர்பாளர், "அமெரிக்கா எல்லா போர் நெறிமுறைகளையும் மீறி எத்தனையோ முறை நடந்து கொண்டுள்ளது. அது, தன்மீதான தவறுகளை மறைக்க அடுத்தவர்கள் மீது பிரச்சினையை திருப்பி விடுகிறது. சிரியா மற்றும் ரஷ்யா உடன் எவ்வித ஆயுத ஒப்பந்தங்களும் வடகொரியா செய்து கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார்.

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்து தி ஹேக் நகரில் உள்ள இரசாயன ஆயுதங்கள் தடுப்பு முகமை தனது விசாரணைகளை ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (10)

# அம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரிய கடற்படைத்தளபதி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தனவினால் ஊடகவியலாளர் ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கடற்படை நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளது.



உயர் நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், எழுத்துமூல மன்னிப்பு கோரிக்கையாக அல்லாமல் பிரசித்தமான மன்னிப்பு கோரிக்கையாக அது அமைய வேண்டும் என சட்டவல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி ஊடகவியலாளர் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில், கடற்படையினால் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-10)

# அம்பாறை இனக்கலவரம் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துங்கள்

## இஸ்லாமிய ஒத்துழைப்பு மையம் கோரிக்கை

(கொழும்பு)

அம்பாறையில் இனவாத கும்பல்களால் மேற்கொள்ளப்பட்ட இனவெறி தாக்குதல்கள் தொடர்பில் சவுதி அரேபியாவின் ஜித்தா நகரை தலைமையகமாக கொண்டு இயங்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC) தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளது.

இவ்வமைப்பு அம்பாறை சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களுக்கு சொந்தமான பள்ளிவாசல், உணவகங்கள் மற்றும் வாகனங்கள் மீது சிங்கள இனவாத கும்பல் ஒன்று திட்டமிட்டு மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அங்கு கடுமையான பதற்றம் நிலவியது.

முஸ்லிம் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். நேரடி அல்லது மறைமுக மீறல்கள், துன்புறுத்தல்கள், அடக்குமுறைகள் இல்லாமல் முஸ்லிம்கள் தங்கள் மத ரீதியான கடமைகளை மேற்கொள்ளவும், தமது வாழ்வாதாரங்களை தேடிக்கொள்வதற்கான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சட்டத்தின் முழுமையான பாதுகாப்பு அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் எனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளுமாறு இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் டாக்டர் யூசுப்பின் அஹ்மத் அல்-உஸைமீன் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் மற்றும் மரபுகளுக்கு இணங்க, முஸ்லிம் சிறுபான்மையினர் தங்கள் மத கடமைகளை நிறைவேற்றும் போது அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அவர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பில் 57 நாடுகள் உறுப்பு நாடுகளாக அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7-10)

# தேசிய கீதத்தை அவமதித்த பிக்குகள்





(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 313 பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் வழங்கும் நிகழ்வின் போது தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது பௌத்த பிக்குகளின் செயற்பாடு அங்கிருந்தவர்களை முகஞ்சுழிக்க வைத்துள்ளது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 313 பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தும் போது பௌத்த மதகுரு மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமனதேரர் சகிதம் கலந்து கொண்ட பிக்குமார் மரியாதை கொடுக்காமல் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

தேசிய கீதம் என்பது ஒரு நாட்டின் அடையாளங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. இதற்கு மதிப்பளிக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனுடைய கடமையாகும்.

ஆனால் இந்த நாட்டில் பௌத்த பிக்குகள் இதனை கடைப்பிடிப்பதில்லை. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வின் போதும் இந்த நிலைமை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ், பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம உட்பட மாகாண முன்னாள் அமைச்சர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், சமயப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (7-10)

# ஓய்வு பெறும் வயதெல்லை 67ஆக உயர்வு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 67 ஆக உயர்த்தப்படவுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் முழு அளவில் ஓய்வுறுத்தப்படக்கூடிய வயது எல்லையை 67 ஆக நிர்ணயம் செய்வது குறித்த புதிய சுற்று நிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி என திகதியிடப்பட்டு இந்த சுற்று நிருபம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் அரச ஊழியர்களின் ஓய்வு பெற்றுக் கொள்ளும் வயதெல்லை 60 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனினும் புதிய சுற்று நிருபத்தின் அடிப்படையில் அரசாங்க சேவையில் நீடித்திருக்கக்கூடிய உச்சபட்ச வயதெல்லை 67 ஆக உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (7-10)

## இன்று ஒரு தகவல்

### உங்களிடம் நீங்கள் கடுமையாக இருப்பது எப்படி?

உங்களை நீங்களே கொஞ்வது எப்படி என்று எழுதிய அதே பேனாவா இந்த கண்ணோட்டத்தையும் எழுதுகிறது? ஆமாம்.

கொஞ்சுவது எப்படிப் பின்பற்றி விட்டு, பல பேர், "புதிய உத்தியாக இருக்கிறதே!" என்று ஏற்புரை சொன்னார்கள்.

சில பேர், "இந்த முறை சரிப்பட்டு வரவில்லை" என்று மறுப்புரை சொன்னார்கள். அந்த மறுப்புரையாளர்களுக்குதான் இந்த மாற்று வழி.

நம் மனதோடு நாம் உரையாடுவது மிக இயற்கையான விடயம். இதற்கு விதிவிலக்காக எவருமே இருக்க முடியாது. அப்படி உரையாடும் போது நன்மையாய் இருக்கும் விடயங்களில் மட்டும் நம் மீது நாம் கடுமை காட்டலாம். தவறில்லை.

காலையில் 7 மணிக்கு எழ வேண்டும். ஆனால் குளிர். இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கலாம் என்று ஒரு நினைப்பு. மறு நினைப்பும் சரி சரி நல்லாத் தூங்கு என்று ஜால்ரா தட்டுகிறது அல்லவா? இப்படித் தட்டி விடக் கூடாது. "எழு! எழுந்து வேலையைப் பார். தூங்கிக் கொண்டே இருந்தால், உருப்பட முடியாது. எழு! கடமையைக் கவனி! ஊம்! மரியாதையாக எழுந்துவிடு" என்கிற கண்டிப்புத் தொனியுடன் இரண்டாவது நினைப்புச் செயற்படவேண்டும்.

கொஞ்சதூரம் நடந்துபோய் ஒரு வாகனத்தைப்பூட்ட வேண்டும். முதல் நினைப்பு சலுகை கேட்கும் – பூட்டாவிட்டால் என்ன என்று. இப்போது இரண்டாவது நினைப்பு வரும். அப்போது விட்டுவிடக்கூடாது. "முடியாது! ஒழுங்காக எழுந்து பூட்டு. வாகனம் தொலைந்தால் நாறிப்போகும் நாறி. இந்தச் சின்ன சோம்பல்தனம் உன்னைப் படாதபாடு படுத்தப் போகிறது! ஊம் பூட்டு!" என்று கட்டளையிட வைக்கவேண்டும்.

இந்த மனப் போராட்டத்தின் நோக்கமும் முடிவும் நல்ல விடயங்களாகவே இருக்கவேண்டும். மாறாக, "உம் அந்தச் சங்கிலியைப் பறி!" என்பதாகவும் எதிர்விளைவான செயலாகவும் இருந்து விடக் கூடாது என்பது முக்கியம்.

மனதுக்குள் நடக்கும் இந்தப் போராட்டத்தை ஒரு கௌரவப் போராகவே ஆக்கிக் கொள்ள வேண்டும். இந்தச் சிறுசிறு மனப் போராட்டங்களில் வெற்றி கொண்டு ஆக்கபூர்வமான சக்தியை வளர்த்துக் கொண்டு விட்டால், வெளி உலகையும் வெளி நபர்களையும் சுலபத்தில் ஜெயித்து விடலாம்.

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கையில் அமெரிக்கப் படைகள் காலூன்ற பல வேலைத்திட்டங்கள்

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ எச்சரிக்கை

(கொழும்பு)

அமெரிக்கப் படை இலங்கையில் காலூன்றுவதற்கான வேலைத்திட்டங்கள் சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அது இலங்கையின் இறைமைக்கும் சுயாதிபத்தியத்திற்கும் பெரும் சவாலாக அமையும் என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார்.

இலங்கையின் கிராமிய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கென அமெரிக்காவின் தொண்டர் சமாதான படையணி என்ற பேரிலேயே அப்படையணி நாட்டில் காலூன்ற உள்ளது. அப்படையணியின் தலைவரை அமெரிக்க ஜனாதிபதியே நியமிப்பார். அப்படையணியை இலங்கையில் காலூன்றச் செய்வது குறித்த உடன்படிக்கைக்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)



# யாத்திரைக்குச் சென்றிருந்த இளைஞன் நீரில் மூழ்கிப்பலி

(ஹறாவூர்)

நல்லதண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவனொளிபாதமலை யாத்திரைக்காக குழுவினருடன் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லதண்ணி பிரதேசத்தில் சிவனொளிபாதமலைக்கு செல்லும் பாலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள ஆற்றுப்பகுதியில் நேற்று முன்தினம் காலை குறித்த இளைஞன் 12 பேர் கொண்ட நண்பர்களுடன் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடனும் குளிக்க சென்றுள்ளார்.

இதன் போது நீராடிக் கொண்டிருக்கும் வேளையில் குறித்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

எனினும் குறித்த இளைஞனை ஏனைய நண்பர்கள் காப்பாற்ற முயற்சித்த போதும் முயற்சி பயனளிக்காத நிலையில் மேற்படி இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்த வத்தளை மாபோல பகுதியில் வசிக்கும் (வயது-19) சுதுவா தேவஹே துஷாந்த பாசித்த என்பவரே உயிரிழந்தவராவார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைக்காக சடலம் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நல்ல தண்ணி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# சார்க் பிராந்திய நுண்நிதி துறை மாநாடு நாளை கொழும்பில்

(கொழும்பு)

சார்க் பிராந்திய நுண்நிதி துறை மாநாடு நாளை 6ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

இந்த மாநாடு கொழும்பு சினமன் ஹோட்டலில் இரு தினங்கள் இடம்பெறும்.

'தெற்காசியாவின் நிதி உள்ளடக்கத்தை வலுப்படுத்துதல்' என்பது இந்த மாநாட்டின் தொனிப்பொருளாகும். தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 300 ற்கும் அதிகமான பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாணிக்கக்கல் அகழ்வு மூவர் நேற்றுக் கைது!

(ஹற்றன்)

பொகவந்தலாவ தெரேசியா தோட்டபகுதியில் விவசாய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் தோட்டமொன்றில் சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் பலாங்கொடை பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை மாணிக்கக் கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு சில உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை களை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அனைத்து பல்கலை. மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

சைட்டம் நெருக்கடி தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.



இந்த பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட சந்தர்ப்பம் ஒன்றை பெற்று தருமாறு அந்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

சைட்டம் எதிர்ப் பின் பிரதான தரப்பினரான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளையும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட வேண்டும் என அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் மருத்துவ பீட மாணவர்களை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சேர்த்துக்கொள்ள அண்மையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டாலும், அது நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பில் இதுவரை உரிய முறையில் அறிவிக்கப்படவில்லை என அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# இந்து மயானம் அபகரிப்பு பொலிஸார் மீது குற்றச்சாட்டு

(அட்டப்பள்ளம்)



அம்பாறை - அட்டப்பள்ளம் பிரதேசத்தில் தமிழ் மக்களின் இந்து மயானத்தை மாற்று இனத்தவர் அபகரிக்க முற்பட்ட சம்பவத்தில் பொலிஸார் நீதியாகச் செயற்படவில்லை. பொலிஸாருடைய இச்செயற்பாட்டிற்கு கடும் கண்டனம் தெரிவிக்கின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் இந்து மயானத்தை அபகரிக்க முற்பட்டோருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பால் 21 அப்பாவி தமிழ் மக்கள் கைது செய்து மட்டக்களப்பு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை சென்று பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பிரதேசத்தில் நூற்றாண்டுகளாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு சொந்தமான இந்து மயானம் அமைந்துள்ள காணியை கடந்த 27 ஆம் திகதி மாற்று இனத்தவர்கள் ஆக்கிரமிக்க முற்பட்ட போது தமிழ் மக்கள் ஒன்றிணைந்து அதனை தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்தனர்.

இதனையடுத்து அங்கு சென்ற அரசாங்க அதிகாரிகள் தமிழ் மக்களுடன் நீண்டநேரம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதுடன் அவர்களது கருத்துக்களை கேட்காமல் மாற்று இனத்தவர்களோடு சேர்ந்து அக்காணியை ஆக்கிரமிக்க துணை போனார்கள்.

இதனையடுத்து மயானத்தை அபகரிக்க முற்பட்டோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார், கோவில் தலைவர் தம்பிமுத்து கோபாலன் மற்றும் இரண்டு பெண்கள் உட்பட 21 பேரின் பெயர்களை குறிப்பிட்டு பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்தனர். அவ்வாறு அங்கு சென்றவர்களை நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, 14 நாட்கள் சிறையில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த மயானத்தில் தமிழ் மக்கள் தமது உறவினரது உடல்களை புதைத்து வருகின்றனர். அவ்வாறான மயானக் காணியை அடிக்கடி மாற்று இனத்தவர்கள் ஆக்கிரமிக்க முற்படுவதும் தமிழ் மக்கள் அதனை எதிர்ப்பதும் நீண்டநாட்களாக இருந்தது.


எனவே இந்த செயற்பாடுகள் தொடரக்கூடாது தடுத்து நிறுத்தவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும். சிறையில் அடைக்கப்பட்ட குடும்பங்கள் மிகவும் வறுமையான குடும்பங்கள். இதனால் அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நிலை தொடர்வது இன நல்லிணக்கத்தை மிகமோசமாக பாதிக்கும் என்பதால் உரியவர்கள் நீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

## விமானப் பராமரிப்பு

# பணியாளர்களின் அலட்சியமே அஷ்ரப் மரணத்திற்கு காரணம்

(கொழும்பு)

விமானப் பராமரிப்பு பணியாளர்களின் அலட்சியமே எம்.எச்.எம். அஷ்ரப் பயணித்த உலங்குவானூர்தியின் விபத்துக்குக்காரணமாக இருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது.



இவ்விபத்து திட்டமிட்ட ஒரு சதியாக இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவிவந்த போதும், குறித்த உலங்குவானூர்தியின் விபத்து தொடர்பாக ஆராய, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி வீரசேகர தலைமையிலான விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

அமைச்சர் அஷ்ரப்பின் மரணத்துக்கு யாரேனும் ஒருவர் அல்லது குழு காரணமாக இருக்கலாம் என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. குண்டுவெடிப்பினால் அல்லது எந்தவொரு வெடிபொருளினால் இந்த விபத்து நேரிட்டமைக்கான ஆதாரங்கள் இல்லை என்று அரசாங்க பகுப்பாய்வாளர், சட்டமருத்துவ அதிகாரி மற்றும் உதவியாளர்கள் ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ளனர் என விசாரணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் விமானப்படைத் தளபதி யைத் தொடர்பு கொண்ட அஷ்ரப், தனிப்பட்ட முறையில் கல்முனை செல்வதற்கு உலங்குவானூர்தி ஒன்றை ஒழுங்கு செய்து தருமாறு கோரியிருந்தார். எனவே பறக்கக்கூடிய நிலையில் இருந்த விமானங்களின் பட்டியலில் இருந்த உலங்குவானூர்தியொன்று ஏற்பாடு செய்து வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் விமானப்படைத் தளபதி தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார் என விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது. 2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி அமைச்சராக இருந்த எம்.எச்.எம். அஷ்ரப் உள்ளிட்டவர்கள் பயணம் செய்த எம்.ஐ.17 உலங்குவானூர்தி ஊரகந்த பகுதியில் மலையில் மோதி விபத்துக்குள்ளானது. இந்தப் சம்பவத்தில் அஷ்ரப் உள்ளிட்ட 14 பேர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மயங்கி விழுந்த மாணவி மரணம்

(கொழும்பு)

கண்டி மாவட்டம் கம்பளை கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டபாகே உடகம மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி கற்ற மதுபாசினி புத்திக லியனகே என்ற 16 வயது மாணவி பாடசாலையில் சங்கீத அறையில் பயிற்சி பெற்று விட்டு நடன அறைக்கு சென்றவேளையில் மயங்கியுள்ளார்.

பின்னர் உடனடியாக ஆசிரியர்களினால் உடகம கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது இடையிலேயே மரணித்துள்ளார்.

மாணவி மரணம் தொடர்பில் கம்பளை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணை அறிக்கையின் மூலம் மாணவியின் மூளைக்கு இரத்தம் செல்லும் நரம்பு ஒன்று வீங்கி வெடித்ததால் இந்த மரணம் நிகழ்ந்துள்ளதாக தெரிய வருகின்றது. (இ-7)

# சர்வதேச குற்றவியல் பொறிமுறையை வலியுறுத்தி கையெழுத்து போராட்டம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு

(ஏறாவூர்)

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க, சர்வதேச குற்றவியல் பொறிமுறையை அமுல்படுத்த ஐ.நா. அழுத்தம் கொடுக்கவேண்டுமெனக் கோரி மட்டக்களப்பில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இப்போராட்டம் நடத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்து வருகின்றது. இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்புச் சபை நேரடியாக தலையிட்டு இவ்விடயத்தை தீர்க்க வேண்டுமென இதன்போது வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு, இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனிதாபிமான மீறல்கள், யுத்தக் குற்றம் தொடர்பில் பொறுப்புக் கூறுகின்ற விடயங்களில் இருந்து இலங்கை தப்பித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இக்கையெழுத்துப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்பதற்காக அனைத்து தமிழ் மக்களும் இணைந்து குரல் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இப்போராட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு, தமது கையெழுத்துக்களை பதிவுசெய்துள்ளனர். (இ-7)





## மர்மப்பொருள் வெடித்து இளைஞன் உயிரிழப்பு!

### பொலிஸார் தீவிர விசாரணை

(புத்தளம்)

புத்தளம் - பாலாவிய பிரதேசத்தில் இரும்பு சேர்க்கும் இடம் ஒன்றில் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம் பெறுள்ளது. குறித்த வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இந்த வெடிப்பு சம்பவம் இடம் பெற்றுள்ளதுடன், அங்கு வேலை செய்து கொண்டிருந்துள்ள இளைஞரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# தரம் 13 வரை எல்லா மாணவர்களும் கற்பதற்காக தொழில்முறைக் கல்வித் துறையின் அறிமுகம்

(28 ஆம் திகதி தொடர்ச்சி...)

(NVQ 4-NVQ6 வரை)

→ தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் கற்கும் வாய்ப்பு NVQ-7 சான்றிதழ் பெறல்

வேலைஉலகிற்குள் நுழைதல்.

இக்கட்டமைப்பிலே மாணவர்கள் 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வியில் கற்கும் போதே வேலை உலகுடன் தொடர்பு கொள்கின்றனர். இதனால் இவர்கள் வருமானம் பெறுவதோடு பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றனர்.

தற்போது இலங்கையில் தொழிலொன்றில் பிரவேசிக்கும் போது தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

2.கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்)

3.பட்டப்படிப்புச் சான்றிதழ்கள்

என்பன அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது போன்று இவற்றுக்கு மேலாக தற்போது மேற்கூறப்பட்ட தகைமைக்கு ஈடாக தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (NVQ) National Vocatio nal Qualification அங்கீகாரம் பெற்ற சான்றிதழாக காணப்படுவதனால் இதனூடாகவும் ஒரு மாணவன் பட்டம் பெற முடியும்.

தொழில் மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் வழிகாட்டலின் படி பின்வரும் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து தொழிற் தகைமைச் சான்றிதழைத் (NVQ) தயாரித்துள்ளன.

1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு.

2. தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனம்.

3. திறன் விருத்தி செயற்றிட்டம்.

### NVQ சான்றிதழை பெற்றுக் கொள்ளக் கூடிய முறைகள்.

1. இச் சான்றிதழை வழங்கும் பின்வரும் நிறுவனங்களில் விரும்பிய பாடநெறியைப் பயின்று ஒரு NVQ சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

2.முறைசாராக் கல்விப்பிரிவு.

3.தொழிற்பயிற்சி அதிகார சபை- VTA

4.தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - NYSC

5. தேசிய பயிற்றுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபை- NAITA

6. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்றுவித்தல் திணைக்களத்தின் கீழுள்ள தொழில் நுட்பவியற் கல்லூரிகள்.

7.பல்கலைக்கழகக்கல்லூரிகள்.

ஏதேனும் ஒரு துறையில் நீண்ட காலமாக ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்து அது தொடர்பான திறன் இருப்பினும் அதை உறுதிப்படுத்தவும் அந்தத் துறையில் உயர் தகைமை பெறவும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தில் தமது திறமைக்கு ஏற்ற ஒரு தொழில் தகைமைச் NVQ சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

அங்கு ஒருவரிடம் காணப்படும் ஆற்றல்களைப் பரீட்சிப்பதற்கான ஒரு பரிசோதனைக்குஉட்படுத்தி அதில் திறமையை உறுதிப்படுத்திய பின் அதற்குப் பொருத்தமான மட்டத்திலான NVQ சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு வழங்கப்படும் சான்றிதழ் RPL (Recognition of prior Learning) முறை எனப்படும். நிபுணத்துவத்தைப் பரீட்சிக்கும்போது குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் குறித்த இடத்திற்கு அழைக்கப்பட்டு பரீட்சித்துப் பார்த்தல் இடம்பெறும்.

### தேசிய தொழில்சார் தகைமை National Vocational Qualification (NVQ)

தேசிய தொழில்சார் தகைமை என்பது ஒரே வர்க்க தொழிலாளர்களிடையே உள்ள தொழில் தகைமை ஏற்றத்தாழ்வை சீர்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை ஆகும்.

### NVQ வரலாற்றுக் காலகட்டங்களாக பின்வருவனவற்றை நோக்கலாம்.

* NVQ முதன் முதலில் பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது 1986 ஆம் ஆண்டு தேசிய தொழில்சார் தகைமைகள் அமுல்படுத்தப்பட்டது.

*1988ஆம்ஆண்டுஅவுஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

*அதனைத் தொடர்ந்து நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூரின் NVQ சான்றிதழ் வழங்கும்நடைமுறைகள் பின்




பற்றப்பட்டது.

*2004-2005 ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இன்று கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவினூடாக NVQ-3 சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றன.

* NVQசான்றிதழைவழங்கக்கூடிய அதிகாரமுடைய நிறுவனமாக மூன்றாம் நிலைக் கல்விதொழிற்கல்வி ஆணைக்குழு-Tertiary and Vocational Education Commission ஆனது திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைக் கைத்தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

*TVEC எனப் பிரபல்யமாக தெரிந்த மூன்றாம் நிலைக் கல்வி தொழிற் கல்வி ஆணைக்குழு 1990ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க மூன்றாம் நிலை தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இதனைத் தொடந்து 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலை தொழிற் கல்விச் சட்டத்தின் கீழ் ஒரு நியதிச் சட்ட அமைப்பாக தாபிக்கப்பட்டது.

### NVQ நன்மைகள்

*தொழிற்பயிற்சிகளையும் தொழிற்சந்தையையும் ஒன்றிணைத்தல்.

*சான்றிதழ்களை இனங்காணல் மற்றும் ஒப்பிடல் இலகுவானது (Certificate) தொழில் வழங்குனர்கள் இலகுவாக தொழிலாளர்களை இனங்காணல். (Certificate)

*பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் / முறைகள் என்பவற்றை ஒத்த விதத்தில் இருக்கச் செய்தல்.

*சர்வதேச அங்கீகரிப்பு

*தேசிய, சர்வதேச ரீதியான இலங்கைத் தொழிலாளர்களின் இடம்பெயர்வாற்றல்.

*முன்கற்றலுக்கான அங்கீகாரத்தை வழங்குகின்றது.

### எவ்வாறு வசதியாக்கப்படுகிறது

* தொழிற்சந்தைக்குரிய தொழிற்பயிற்சிகள் தெரிவு செய்யப்படுதல்

*தேர்ச்சிக்கான திறன்களும் அதற்கான நியமங்களும் கைத்தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படுதல்.

*தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி முறைமை (CBT) பின்பற்றப்படல்.

*தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு முறைமை.

*பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் பதிவு செய்து பயிற்சிநெறிகளுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.

தொகுத்து நோக்குமிடத்து தொழில்முறைக் கல்வித் துறையின் அறிமுகமானது இலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு ஒரு வரமாகும். ஏனெனில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைய தவறியவர்கள் இத்துறையில் இணைவதன் மூலம் தொழிற்றுறை சார்ந்த வகையில் வருமானத்தை பெறுவதோடு பட்டம் பெற்று தமக்கும் தமது தாய் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதோடு பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்ய முடியும். இதனை நாம் அனைவரும் சரியான முறையில் பயன்படுத்தி பயன் பெறுவோம்.

வயவன் சிவசாகரன்

# சிறுமிக்கு கிடைத்த தங்கச்சிலை



(கொழும்பு)

புத்தளத்தில் சிறுமி ஒருவருக்கு அதிர்ஷ்டமாக தங்க சிலை கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் ரஜவிகம பிரதேசத்தை சேர்ந்த 11 வயது சிறுமி கடந்த 27ஆம் திகதி வீட்டுத் தோட்டத்தில் இருந்து சிலையை கண்டெடுத்துள்ளார்.

4 அங்குல உயரத்திலுள்ள இந்த சிலை சுமார் 500 கிராம் நிறையுடைய தங்கம் என கருவலகஸ்வெவ பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ரஜவிகம கிராமசேவகரினால் சிலை பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளது. சிறுமியினால் கண்டெடுக்கப்பட்ட சிலை தொடர்பில் அறிந்து கொண்ட கிராம மக்கள் கிராமசேவகர் மற்றும் பொலிஸாரிடம் தகவல் அறிவித்துள்ளனர்.

குறித்த சிலை புதையலில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-10)

# மருந்து வகைகளின் விலை மேலும் குறைக்கப்படும்

## அமைச்சர் ராஜித தகவல்



(கொழும்பு)

மருந்து வகைகளின் விலையை மேலும் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

புற்றுநோய், இருதய நோய் போன்ற பாரிய நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மருந்து வகைகளின் விலைக் குறைப்பு காரணமாக மக்கள் பெரும் நன்மையடைந்திருந்த போதிலும், ஊடகங்கள் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சில மருந்து வகைகளின் விலைகள் பல மடங்காக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தேசிய ஔடத அதிகார சபையின் தலைவர் ஹசித டி சில்வா கருத்து வெளியிடுகையில்,

அரசாங்கத்தின் இந்த விலை குறைப்புக்கான நடவடிக்கையின் மூலம் 900 கோடி ரூபா இலாபம் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

48 மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டதனால், பல்வேறு விற்பனை நாமத்தின் கீழான ஆயிரம் மருந்து வகைகளின் விலைகள், குறைந்திருப்பதாகவும் நிகழ்வில் கலந்து கொண்ட தனியார் மருந்து விற்பனையாளர்களின் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவித்தார். (இ-7)

# பாடசாலைச் சுற்றுப்புறத்தில் சிகரெட் விற்பனைக்குத் தடை

(கொழும்பு)

பாடசாலைகளைச் சூழ 100 மீற்றர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சிகரெட் விற்பனையை தடைசெய்வது குறித்த வர்த்தமானி அறிவித்தலை எதிர் வரும் 7ஆம் திகதி வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார தினத்தை முன்னிட்டே குறித்த தினத்தில் வர்த்தமானியை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளை சூழ 500 மீற்றர் எல்லைப் பகுதிக்குள் சிகரெட் விற்பனையை தடுப்பதற்கான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அதன் எல்லையின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு சிகரெட் விற்பனை செய்யும் சட்டத்தை 21 வயது வரை அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தீர்மானித்துள்ளதாகவும், இதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (7-10)

# விமானப் பயணங்கள் தாமதமடைவதனால் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 5 கோடி நட்டம்

(கொழும்பு)

விமானப் பயணங்கள் தாமதமடைந்த காரணத்தினால் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு ஐந்து கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானப் பயணங்கள் தாமதமடைந்துள்ளதாக விமான நிலைய உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில விமானங்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகளால் விமானப் பயணங்கள் காலதாமதமடைந்துள்ளன.

கடந்த வாரத்தில் மட்டும் விமானப் பயணங்கள் காலம் தாழ்த்தப்பட்டுள்ளன.

விமானப் பயணங்கள் காலம் தாமதித்த காரணத்தினால் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. (7-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1347

Search for people, places and things Nagendram Home

## சஜீவன்

மனைவியை எதிர்த்துப் பேசும் கணவனை டிவி சீரியலில் மட்டுமே காணலாம்



## கிரிசாந்


பேஸ்புக்ல 15 லைக்தான் வருது அப்பிடின்னு பீல் பண்றது வாழ்க்கை இல்லை...



பதினைந்து லைக்காச்சும் வருதேனு சந்தோஷப்படுறது தான் வாழ்க்கைக்கு நல்லது

## சிந்துஜன்

கல்யாண வாழ்க்கை



நினைப்பது கிடைப்பது

## சிலம்பரசன்

குரு பார்க்க கோடி நன்மைனு சொல்றாங்க பொறந்து இத்தனை வருசம் ஆச்சு இன்னும் நம்மல பார்த்த பாடில்ல



ஒருவேளை நாம பொறந்ததே அவருக்குத் தெரியாம போயிருக்குமோ...

## நிவிதன்

கணவன் சாப்பிட்ட பின் சாப்பிடும் மனைவி கேட்கல



கணவன் சாப்பிடுற மாதிரி சமைக்கிற மனைவிதான் கேட்கிறன்

## நிவேதன்

தண்ணில கண்டம்ன்னு சொல்றது தமிழனுக்குத் தான் சரியா வரும்...
விவசாயி தண்ணியில்லாம சாகுறான்..,
மீனவன் தண்ணிக்குள்ள போய் சாகுறான்...
மிச்சம் இருக்கிறவன் தண்ணியடிச்சே சாகிறான்...



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிவனொளிபாதமலையில் கஞ்சாவுடன் 8பேர் கைது

(ஹற்றன்)

சிவனொளிபாத மலையினை தரிசிப்பதற்காக சென்ற 8 பேரிடமிருந்து ஒரு தொகை கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மதுபோதையில் இருந்த வர்களையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஹற்றன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினர் கோரா என்ற மோப்ப நாயின் உதவியுடன் கைது செய்துள்ளனர்.

நாட்டின் பல பிரதேசங்களிலிருந்து சிவனொளிபாத மலையினை தரிசிப்பதற்காக சென்றவர்களிடமிருந்தே மேற்படி கஞ்சா கைப்பற்றப்பட்டது.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை தொடக்கம் ஹற்றன் மல்லியப்பு வரையிலான பகுதிகளிலும், தியகல பகுதிகளிலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பல வாகனங்களை திடீரென ஹற்றன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினர் சோதனை செய்தனர்.

இதன்போது வெவ்வேறு வாகனங்களில் பயணித்த எட்டு பேரிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து குறித்த எட்டு பேரையும் கைது செய்த ஹற்றன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினர், ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்ய நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் 9ம் திகதி வர்த்தமானியில்

## மகிந்த தேசப்பிரிய தகவல்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் எதிர்வரும் 9ம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பெயர்ப்பட்டியலை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்துவதற்காக அந்தந்த கட்சிக்காக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கணக்கிடப்பட்டு, தற்போது மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரிகள் ஊடாக அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், அரசியல் கட்சிகள், தெரிவு செய்யும் உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வழங்குவதற்கான இறுதிநாள் கடந்த வெள்ளிக்கிழமை என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, இந்தக் கால எல்லைஎதிர்வரும்புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, பெயர்ப்பட்டியலை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தும் பணி எதிர்வரும் 9ம் திகதி இடம்பெறவுள்ளது.

அத்துடன் இந்தத் தினம் மேலும் நீடிக்கப்படமாட்டாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சட்டம் ஒழுங்கு அமைச்சராக கிரியெல்ல விரைவில் நியமனம்

## பிரதமர் ரணில் திட்டம்



(கொழும்பு)

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு பதவியை அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது அமைச்சரவை மாற்றத்தின் போது சாகல ரத்நாயக்கவிடம் இருந்த சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுப் பொறுப்பு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

குறித்த அமைச்சு பதவி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கப்பட்டது. எனினும் குறித்த அமைச்சு பதவி சரத் பொன்சேகாவுக்கு வழங்குவதற்கு முன்னதாக திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கு அரசாங்கத்தில் இருப்பவர்களும், பொலிஸ் துறையில் உயர்மட்டத்தில் இருப்பவர்களும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், லக்ஸ்மன் கிரியெல்லவைத் தொடர்பு கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் பதவியை பொறுப்பேற்கத் தயாரா என்று கேட்டுள்ளார்.

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல ஒரு சட்டத்தரணி. நாடாளுமன்றத்தில் அவைத் தலைவராகவும் இருக்கிறார். எனவே அவருக்கு இந்தப் பதவி பொருத்தமாக இருக்கும் என்றும் ஐ.தே.க. தலைமை கருதுகிறது.

எனினும், இந்தத் திட்டத்துக்கு லக்ஸ்மன் கிரியெல்ல இன்னமும் பதிலளிக்கவில்லை என அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இனவாதிகளுக்கு கொடுக்கும் தண்டனை ஒரு பாடமாகட்டும் -அமீன் வலியுறுத்து



(கொழும்பு)

அம்பாறைச் சம்பவத்தின் உண்மை நிலைமையை பெரும்பான்மைச் சமூகத்துக்கு தெளிவுபடுத்த முன்வந்த பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், வைத்திய நிபுணர்கள் ஆகியோருக்கும்சில ஊடகங்களுக்கும் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் என்பவற்றின் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார்.

அம்பாறை வன்முறைச் சம்பவம் தொடர்பிலான தற்போதைய நிலைமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

எந்தவித அடிப்படையும் இல்லாத ஒரு காரணத்தை வைத்தே முஸ்லிம்களின் சொத்துக்கள் அம்பாறையில் அழிக்கப்பட்டுள்ளன. இதனை அரச சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கை மேலும் உண்மைப்படுத்துகின்றது.

இச்சம்பவத்திலும் பொலிஸார் முரண்பாடான செயற்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த அரசாங்க காலங்களில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான இன வன்முறைகளின் போதும் இவ்வாறு பொலிஸார் நடந்து கொண்டனர். இந்த நடவடிக்கைக்கு இனியும் அரசாங்கம் இடமளிக்கக்கூடாது.

இனவாதத்தை தூண்டிய வர்களுக்கும், அதில் நேரடியாக ஈடுபட்டவர்களுக்கும் அதற்கு ஒத்துழைத்த பாதுகாப்புத் துறையினருக்கும் தகுந்த தண்டனையை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும். இது இனிவரும் காலங்களில் இனவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு சிறந்த பாடமாக அமைய வேண்டும்.

இதேவேளை, இது போன்ற நிலைமைகளை இனவாதிகள் தவறாக புரிந்து கொள்ளாமல் இருக்கும் வண்ணம் முஸ்லிம்களும் தமது அன்றாட நடவடிக்கைகளை பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் அமைத்துக் கொள்ள வேண்டும். சகவாழ்வு சிந்தனையை இஸ்லாம் முன்வைத்துள்ளது.

இதனை முஸ்லிம்கள் கையில் எடுத்துக் கொள்ளத் தவறக் கூடாது எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விகாரை நிர்மாணிக்க பணம் வசூல் போலி பிக்குவும் இளைஞனும் கைது

(கொழும்பு)

விகாரையொன்றை நிர்மாணிப்பதற்கு பணம் வசூல் செய்து வந்த போலி புத்த பிக்குவையும் இளைஞர் ஒருவரையும் மகியங்கனை பிரதேச இளைஞர்கள் பிடித்து, மகியங்கனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மகியங்கனையில் இடம்பெற்றுள்ளது. பணம் வசூல் செய்த புத்தபிக்கு மீது மகியங்கனை பிரதேச இளைஞர்களுக்கு சந்தேகம் ஏற்படவே அவர்கள் குறித்த பிக்குவையும் அவருடன் உதவிக்கு வந்த இளைஞரையும் விசாரணை செய்துள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் புத்த பிக்குவைப் போன்று குறித்த நபர் வேடமிட்டு வந்துள்ளார் என்பதையும் மற்றையவர் அவருக்கு உதவியாளர்போன்று வந்து மக்களை ஏமாற்றி பணம் சேகரிப்பவர் என்றும் தெரிய வரவே இருவரையும் பிரதேச இளைஞர்கள் நையப்புடைத்துள்ளனர். பின்பு மகியங்கனை பொலிஸாரிடம் இது குறித்து முறைப்பாடு செய்யவே அவர்கள் இருவரையும் கைது செய்து விசாரித்ததில் இருவருமே பணம் வசூலிக்க செய்த நாடகம் என தெரியவந்துள்ளது.

மேலும் இவ்விருவரும் பயணித்த ஆட்டோ நிதி வசூல்செய்வதற்கு தயாரிக்கப்பட்ட போலி பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் 25 யும் வசூல் செய்யப்பட்டிருந்த 5880 ரூபா பணம் மற்றும் காவி உடைகள் சிலவற்றையும் மகியங்கனைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்விருவர் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதன் பின்னர் மகியங்கனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவர் என மகியங்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ருவன் அமரக்கோன் தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் விவகாரம் புத்தகப்பையை பரிசோதித்த அதிபர் மீது மாணவன் தாக்குதல்

(கொழும்பு)

மாணவன் ஒருவன் கடுமையாக தாக்கியதில் காயமடைந்த அதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இச்சம்பவம்கிரிபத்கொடை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமுற்றவர் களனி பிலபிட்டிய ஜனாதிபதி மகா வித்தியாலய அதிபர் நீல் பிரியந்த என தெரிய வந்துள்ளது.

கல்விச்சுற்றுலா ஒன்றிற்கு மாணவர்கள் தயாராக இருந்த நிலையில் 11 வயதுடைய ஒரு மாணவனின் பையை அதிபர் பரிசோதிக்க முயன்றிருக்கிறார்.

அச்சந்தர்ப்பத்தில் குறித்த மாணவன் அதிபர் மீது தாக்குதலை நடத்தியுள்ளார்.

இது குறித்து பொலிஸார் தெரிவிக்கையில்,

குறித்த பாடசாலை மாணவர்கள் கல்விச்சுற்றுலா செல்வதற்கு தயாரான நிலையில் அவர்களது பைகளில் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் எதுவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவ்வாறு எது பைகளை பரிசோதிக்கும் படி அதிபர் உத்தரவிட்டுள்ளார். குறித்த மாணவர் அதற்கு அனுமதி தராது சுற்றுலா பேருந்தில் ஏற முற்பட்டிருக்கிறான்.

இதையடுத்து ஆசிரியர்களின் முறைப்பாட்டினால் அந்த இடத்தில் வந்த அதிபர் மாணவனின் பையை பரிசோதிக்க முற்பட்டபோது திடீரென அம்மாணவன் அதிபரை சரமாரியாக தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான்.

இது குறித்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# சிரியாவில் இழைக்கப்படும் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்

## ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் எச்சரிக்கை

(டமாஸ்கஸ்)

சிரியாவின் கிழக்கு கௌட்டாவில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென, ஐ.நா. சபையின் மனித உரிமை விவகாரங்களுக்கான ஆணையாளர் ஷெய்ட் ராட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.



ஜெனிவாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிரிய விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது, 'சிரியாவின் கிழக்கு கௌட்டாவில் விமானத் தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், கிழக்கு கௌட்டா உட்பட சிரியாவில், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களும் யுத்தக் குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளமை தொடர்பாகத் தெரியவந்துள்ளது. சிரியாவிலுள்ள பொதுமக்கள் அடக்குமுறைக்கு உள்ளாகின்றனர். அல்லது மரணத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, சிரியாவில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும்.

சிரியாவில் இழைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்பதுடன், யுத்தக் குற்றங்கள் இழைத்தவர்கள் அடையாளம் காணப்பட வேண்டுமெனவும் குற்றவாளிகளை நியாயப்படுத்துவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அவமானகரமானவையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

## மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பம் அறிமுகம்

(கொழும்பு)

குளங்களில் மேற்கொள்ளப்படும் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வது தொடர்பில் கடற்றொழில், நீரியல்வள அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

குளங்களில் உள்ள நீரில் காணப்படும் மீன் உற்பத்திக்கான இயற்கைத் தன்மை குறைவடைவதே மீன் உள்ளிட்ட நீரியல்வாழ் உயிரினங்கள் குறைவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இதற்குத் தீர்வாக, புதிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

விசேடமாக குளங்களில் வளர்க்கப்படும் இறால் மற்றும் ஏனைய மீன் இனங்கள் உடலில் காணப்படும் இரசாயனப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. (இ-7)

## தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கல்விச் செயற்பாடுகள் ஒத்திவைப்பு

(ஏறாவூர்)

பல்கலைக்கழகங்களில் தற்போது நடைபெற்றுவரும் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 28.02.2018 - 11.03.2018 வரையிலான காலப்பகுதியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அனைத்து கல்வி நடவடிக்கைகள், பரீட்சைகள், தெரிவுப் பரீட்சைகள், மாணவர் பதிவுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் யாவும் ஒத்தி வைக்கப்பட்டுள்ள தாக அப்பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பில், பல்கலைக்கழக தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக கல்விச் செயற் பாடுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள போதிலும், 12.03.2018 இலிருந்து நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் கல்வி நடவடிக்கைகள் (பரீட்சைகள் தவிர்ந்த) பொது அறிவித்தல் மூலம் மீண்டும் அறிவிக்கப்படாத விடத்து திட்டமிட்டபடி நடைபெறும்.

மேலதிக விபரங்களிற்கு பல்கலைக்கழக இணையத்தளத்திற்கு (www.ou.ac.lk) விஜயம் செய்து விபரங்களைப் பெற்றுக் கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சட்டமாணி (LLB) மற்றும் முகாமைத்துவக் கற்கைகள்மாணி (BMS) கற்கை நெறிகளுக்கான தெரிவுப் பரீட்சைகள் நடைபெறும் திருத்தப்பட்ட திகதி பத்திரிகைகள் மூலமும் பல்கலைக்கழக இணையத்தளம் மூலமும் பின்னர் அறியத்தரப்படும்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களிற்காக வருந்துகின்றோம். இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# பட்டுப் பாதைத்திட்டம் நன்மை பயக்கக்கூடியது

## சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் ஆதரவு

(கொழும்பு)

சீனாவின் பட்டுப்பாதை திட்டம் இலங்கையர்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என சீனாவுக்கான இலங்கை தூதர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

சீன ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்குலக முதலாளித்துவ நாடுகளின் வரலாற்றை பார்க்கும்போது, அவை ஏனைய நாடுகளை ஆக்கிரமித்து வந்துள்ளன.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் மேற்குலக முதலாளித்துவவாதிகள் கூறும் கருத்துக்கள் அடிப்படையற்றவை.

இதன்மூலம் அந்த நாடுகளை தமது மக்களின் நலன்களையே முன்னிலைப்படுத்தியுள்ளன.

சீனாவின் பட்டுப்பாதை திட்டமானது இலங்கைக்கு நன்மைப் பயக்கக்கூடியது. எனவே; நாம் அதனை ஆதரித்து, அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று என்று சீனாவுக்கான இலங்கை தூதுவர் கருணாசேன



கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பாறையில் மாவட்ட அதிகாரிகள் இனவாதத்துடன் செயற்படுகின்றனர்

## த.தே.கூ.எம்.பி. வியாழேந்திரன் குற்றச்சாட்டு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சில அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இனவாதக் கண்ணோட்டத்துடன் செயற்பட்டு வருவதைக வன்மையாகக் கண்டிக்கின்றோம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.




மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள நிந்தவூர் - அட்டப்பள்ளம் பகுதியைச் சேர்ந்த 21 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலைக்கு சென்று வியாழேந்திரன் பார்வையிட்டார். இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இனவாதக் கண்ணோட்டத்துடன் தமிழ் மக்களுக்கு எதிராக அதிகாரிகள் செயற்பட்டு வருவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் அபரிக்கப்படுகின்றமை தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன.

அட்டப்பள்ளத்தில் தமிழ்க் குடும்பங்கள் வசித்துவருகின்ற இடத்தில் 14 ஏக்கர் காணியை கடந்த ஆண்டு சகோதர இனத்தை சேர்ந்த ஒருவர் அதற்குரிய ஆவணத்தைக் காண்பித்து வேலியடைத்துள்ளார். தற்போது மிகுதியாகவுள்ள மேலும் இரண்டு ஏக்கருக்கு வேலியை அமைக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

நீண்டகாலமாக மயான பூமியாக பயன்படுத்தப்பட்டு வந்த பகுதியானது பொறுப்பற்ற சில அதிகாரிகளின் செயற்பாடுகளின் அரசியல் பின்புலத்துடன் அபகரிக்கப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆரம்பகாலத்திலிருந்து வரும் மயானக்காணிகள் நில அளவை செய்யப்படாத காரணத்தினால் சில இடங்களில் பிரதேசசபைகளில் பதிவுசெய்யப்படாத நிலையிருக்கின்றது. அதனை சாதகமாக வைத்துக்கொண்டு அட்டப்பள்ளம் என்னும் தமிழர்களின் பூர்வீக கிராமத்தில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீகமான மயானக்காணி அபகரிக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மக்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். இது குறித்து எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின் போது கவனத்திற்கு கொண்டுவர இருக்கின்றேன்" எனத் தெரிவித்தார். (இ-7)

## அமெரிக்க எச்-4 விசா விவகாரம்; ஜூன் வரை தற்காலிக இடைநிறுத்தம்

(வோஷிங்டன்)

எச்-4 விசா பற்றி தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என ட்ரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவில் குடியுரிமை பெறாமல் அங்கு தங்கியிருந்து வேலை செய்யும் வெளிநாட்டினருக்கு எச்-1 பி விசா வழங்கப்படுகிறது. இதே போல் அங்கு பணிபுரியும் வெளிநாட்டினரின் மனைவி அல்லது கணவருக்கு பணியாற்ற அனுமதிக்கும் வகையில் எச்-4 விசா வழங்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவி ஏற்றதில் இருந்து இந்த 2 விசாக்களின் கீழும் அங்கு பணியாற்றும் வெளிநாட்டவர்களை கட்டுப்படுத்தும் விதமாக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

குறிப்பாக எச்-4 விசா வைத்திருப்போர் வேலை செய்வதற்கு அனுமதி அளிக்கும் ஆவண விநியோகத்தை நிறுத்துவதற்கு ட்ரம்ப் நிர்வாகம் தீர்மானித்தது. இதனால் வெளி நாடுகளிலிருந்து சென்று அமெரிக்காவில் பணிபுரியும் இலட்சக்கணக்கானோர் தங்களது வேலையை இழக்கும் அபாயம் ஏற்பட்டது.

இந்த நிலையில்,தற்போது இந்த முடிவை 4 மாதங்கள் வரை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என ட்ரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு துறை வோஷிங்டன் நகர நீதிமன்றில் ஒரு ஆவணத்தை சமர்ப்பித்தது.

அதில், "இப்பிரச்சினை தொடர்பாக நாட்டில் ஏற்படும் பொருளாதார தாக்கத்தை ஆய்வு செய்வதற்காக வருகிற ஜூன் மாதம் வரை தொடர்ந்து பழைய நடைமுறையே அமுலில் இருக்கும். அதுவரை இதில் எந்த முடிவும் எடுக்கப்படாது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)




# நரி ருசித்த அப்பம்

மீனாட்சி பாட்டி வயலூரில் இட்லி கடை வைத்து நடத்தி வந்தார். அவர் சமைக்கும் பலகாரங்கள் மிகவும் சுவையாக இருக்கும். விலையும் குறைவாக இருக்கும். அதனால் பக்கத்து ஊரில் இருந்து கூட இட்லி வாங்கிச் செல்வார்கள். கடையில் எப்பொழுதும் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

பாட்டிக்கு அடுப்பு எரிக்க, சுள்ளிகளைக் கொண்டு வந்து தருவது அவரது பேரன் குருபரன்தான். ஆனால் அவர் காய்ச்சலில் படுத்து விட்டதால், இன்று பாட்டியே காட்டுக்குச் செல்ல வேண்டியதாகிவிட்டது. மதியச் சாப்பாட்டுக்கு ஆப்பமும் தேங்காய்ப்பாலும்எடுத்துக்கொண்டார்.

ஒரு மரத்தில் தூக்குச் சட்டியை வைத்துவிட்டு, சுள்ளிகளை எடுக்க ஆரம்பித்தார் பாட்டி. அருகில் இருந்த புதருக்குள் குள்ளநரி ஒன்று பசியோடு இருந்தது. வயதாகிவிட்டதால், முன்பு போல் வேட்டையாட முடியவில்லை. பாட்டியின் ஆப்பம், தேங்காய்ப் பால் வாசம் அதன் மூக்கைத் துளைத்தது. சத்தம் இல்லாமல், தூக்குச் சட்டியை எடுத்துக்கொண்டு புதருக்குள் மறைந்துகொண்டது. ஒரு கட்டு சுள்ளிகளைச் சேகரித்த பாட்டி, சாப்பிட வந்தார். தூக்குச் சட்டியைத் தேடினார்.



"ஐயோ! தூக்குச் சட்டியைக் காணோமே? யார் எடுத்திருப்பாங்க? ஏதாவது விலங்கு தூக்கிக்கொண்டு போயிருக்கலாம். இன்னிக்குப் பட்டினிதான்" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு, மீண்டும் சுள்ளிகளைச் சேகரிக்க ஆரம்பித்தார் பாட்டி.



வயிறு நிறைய சாப்பிட்டு முடித்தது குள்ளநரி. "என்ன ஒரு சுவை! அடடா! இவங்க பின்னாடியே போய் வீட்டைக் கண்டுபிடிக்கலாம். தினமும் இட்லியும் ஆப்பமும் சாப்பிடலாம்" என்று முடிவு செய்த குள்ளநரி, பாட்டியைப் பின் தொடர்ந்தது.

வீட்டுக்குச் சென்றதும் கதவைச் சாத்திக் கொண்டார் பாட்டி. குள்ளநரி பக்கத்து வயலில் ஒளிந்து கொண்டது.

சிறிது நேரத்தில் கதவு திறந்தது. யாரும்கவனிக்காத போது வீட்டுக்குள் நுழைந்தது. அங்கிருந்த நெல்குதிரில் ஒளிந்து கொண்டது.

காலையில் இட்லியும் ஆப்பமும் செய்து, ஒரு பாத்திரத்தில் மூடி வைத்து விட்டு குளிக்கச் சென்றார் பாட்டி. அந்த நேரம் நெல் குதிரிலிருந்து வெளியே வந்து, இட்லியையும் ஆப்பத்தையும் திருப்தியாகச் சாப்பிட்டது. பிறகு வயலை நோக்கி ஓடிவிட்டது குள்ளநரி.

இப்படித் தினமும் இரவில் நெல்குதிரில் ஒளிவதும் காலையில் சாப்பிட்டு விட்டு வயலுக்கு ஓடுவதுமாக இருந்தது.

பாட்டிக்குப் பலகாரங்கள் காணாமல் போவது குறித்து கவலையாக இருந்தது.

தொடரும்...




❖1770-பாஸ்டன் படுகொலை: பாஸ்டனில் அமெரிக்கர்களுக்கும் பிரித்தானியப் படையினருக்கும் இடையில் கிளம்பிய கலவரத்தை அடுத்து ஐந்து அமெரிக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

❖1793-பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியாவினால் தோற்கடிக்கப்பட்டன.

❖1824-பிரித்தானியர் பர்மாவின் மீது போர் தொடுத்தனர்.

❖1964-இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.

❖2008-இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

❖1931- கே. ஏ. சுப்பிரமணியம், இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (இ. 1989)

❖1938-லின் மர்குலிஸ், அமெரிக்க உயிரியலாளர் (இ. 2011)

❖1958-நாசர், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

❖1959-சிவ்ராஜ் சிங் சௌஹான், மத்தியப் பிரதேச முதலமைச்சர்

❖1984-ஆர்த்தி அகர்வால், இந்திய திரைப்பட நடிகை (இ. 2015)

### இறப்புகள்

❖254- முதலாம் லூசியஸ் (திருத்தந்தை) (பி. 200)

❖1827-பியர் சிமோன் இலப்லாசு, பிரான்சியக் கணிதவியலாளர், வானியலாளர் (பி. 1749)

❖1827-வோல்ட்டா, இத்தாலிய இயற்பியலாளர் (பி. 1745)

❖1903-உசான்-அனத்தோல் தெமார்சே, பிரான்சிய வேதியியலாளர் (பி. 1852)

❖1953-ஜோசப் ஸ்டாலின், சோவியத் ஒன்றியத்தின் 2வது அரசுத்தலைவர் (பி. 1878)

❖1966-அன்னா அக்மதோவா, உக்ரைனிய-ரஷ்யக் கவிஞர் (பி. 1889)

❖1994-வ. பொன்னம்பலம், இலங்கை இடதுசாரி அரசியல்வாதி, கல்வியாளர் (பி. 1930)

❖2006- கே. சங்கர், தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர், திரைப்படத் தொகுப்பாளர் (பி. 1926)

❖ 2013-ம. பார்வதிநாதசிவம், ஈழத்துப் புலவர், பத்திரிகையாளர், தமிழறிஞர் (பி. 1936)

❖2013-ஊகோ சாவெசு, வெனிசுவேலாவின் அரசுத்தலைவர் (பி. 1954)

### சிறப்பு நாள்

❖மர நாள் (ஈரான்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 64 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 60 | 100 | 60 |
| தக்காளி | 20 | 20 | 25 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 100 | 70 | 160 | 70 |
| பூசணி | 60 | 35 | 40 | 80 | 50 |
| புடோல் | 80 | 60 | 35 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 50 | 45 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 130 | 140 | 90 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 | 80 | 60 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 60 | 100 | 50 | 80 | 70 |
| லீக்ஸ் | 150 | 160 | 130 | 160 | 160 |
| பீற்றூட் | 30 | 40 | 30 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 100 | 70 | 120 | 180 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 80 | 200 | 70 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 50 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 30 | 70 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 35-90 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 140 | 130 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 70 | 120 | 100 |
| முள்ளங்கி | 20 | 100 | 20 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | – | 80 | 70 |

உண்மைக்காக எதையும் துறக்கலாம்;
ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே
- சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஹலோ கைகேயி... நான் இங்க மந்தரை...

இராமாயணத்தின் தோற்றுவாய் என்று கூறக்கூடிய கைகேயியும் அவள் தோழியான மந்தரை எனும் கூனியும் சமகாலத்தில் சந்தித்தால் என்ன விடயம் பற்றிப் பேசுவார்கள் என்று கற்பனை செய்தோம்

அட, வேலை இல்லையென்றால் இப்படியான கற்பனைகள்தான் வரும் என்று யாரும் நினைத்து விடாதீர்கள். இன்றைய கால சூழல் அப்படியொரு கற்பனைக்கு வழி வகுத்தது.

இதோ! கைகேயியும் அவள் தோழி கூனியும் தொலைபேசி வாயிலாக உரையாடுகின்றனர்.

**கூனி:** ஹலோ கைகேயி நான் கூனி பேசுறன்.

**கைகேயி:** அட, நீண்டகாலம் சந்தித்து அந்த யுகத்தில தொலைபேசி இல்லை. அடிக்கடி அந்தப்புரத்தில் சந்தித்தம் இப்ப...

சரி சரி என்ன சங்கதி.

**கூனி:** என்ன சங்கதியோ இப்ப எங்கள் மண்ணில நடக்கிறது தெரியும்தானே!

**கைகேயி:** சத்தியமாச் சொல்லுறன் எனக்கு ஒன்றும் தெரியாது.

**கூனி:** கைகேயி தமிழ் மக்கள் பேரவைக்குள்ள குழப்பம் என்பது உனக்குத் தெரியாதோ!

**கைகேயி:** இம்... தொடங்கிற்ற, இராமரைக் காட்டுக்கு அனுப்பி அயோத்தி மாநகரச் சிம்மாசனத்தில் 14 ஆண்டுகள் பாதுகையை இருக்கச் செய்து; என்ர மானத்தையும் கப்பல் ஏற்றின நீ, இப்ப என்ன சொல்லுற.

**கூனி:** தமிழ் மக்கள் பேரவையைக் குழப்பினால்தான் உன் போன்றவர்களின் இருப்புச் சரி வரும். எப்படியாவது குழப்பு.

**கைகேயி:** இஞ்சே! கூனி ஒருக்கால் பட்டது போதும். தமிழ் மக்கள் பேரவை ஒன்றுதான் தமிழ் மக்களின்ர நம்பிக்கைக்குரிய அமைப்பாக இருக்குது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர தலைமையைத்தான் தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

அவர் ஆற்றுகிற யதார்த்தமான உரைகளாலதான் தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் ஆறுதல் அடையினம். அதுக்கும் உலைவைச்சுப் போடாத.

**கூனி:** கைகேயி உனக்கு ஒன்றும் விளங்கல்ல. முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு மக்கள் மத்தியில இருக்கிற செல்வாக்கை உடைக்காவிட்டால் நாம் ஒன்றும் செய்ய ஏலாது.

**கைகேயி:** கூனி, நீ சொல்லுவதற்கு நான் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டன். எங்கட தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்ய நான் ஒருபோதும் தயாரில்லை.

**கூனி:** நீ ஒன்றும் செய்ய வேண்டாம். பேரவைக்குள் குழப்பம்; பேரவை இரண்டாக உடைந்து போயிற்றுது; அதிகாரத்தை முதலமைச்சர் தன் கையில் எடுத்துக் கொண்டார். இப்படித் தகவல்களைச் சொல்லு அதுபோதும்.

**கைகேயி:** கூனி, தமிழ் மக்கள் மிகவும் விழிப்பானவர்கள். அவர்கள் தமிழ் மக்கள் பேரவையிலும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா மீதும் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்கள்.

தமிழ் மக்களை இனி யாராலும் ஏமாற்ற முடியாது. அவர்கள் மிகத் தெளிவாகவும் விழிப்பாகவும் உள்ளனர்.

**கூனி:** கைகேயி உனக்கு நான் சொன்னால் விளங்காது. தமிழ் மக்கள் பேரவையையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் தகர்த்தால் தான், எங்களால அரசியல் பிழைப்பு நடத்த முடியும். ஒருக்கால் அது பற்றி சிந்தித்துப் பார்.

**கைகேயி:** சரி... சரி... முயற்சித்துப் பார்க்கிறன். வரம் கேட்பதுதான் யாரிடம் என்று தெரியவில்லை.

# மாத்திரை கலந்த உணவு பரிமாறுவதனால் மலட்டுத் தன்மையை ஏற்படுத்த முடியாது

## சுகாதார அமைச்சு அறிக்கையில் தெரிவிப்பு

உலகில் மேலைத்தேய மருத்துவத்தில் (ஆங்கில முறை மருத்துவத்தில்) மருந்து மாத்திரை ஊடாக மலட்டுத் தன்மையை ஏற்படுத்த எந்தவொரு முறையும் இதுவரையில் அறிமுகம் செய்யப்படவில்லை என அரச சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் விசேட வைத்திய நிபுணருமான அனில் ஜயசிங்க அறிவித்துள்ளார்.

அம்பாறையில் முஸ்லிம் உணவகத்தில் சர்ச்சையாக மாறியுள்ள மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும் மாத்திரை கலந்த உணவு பரிமாறல் குறித்து சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் உணவு தொடர்பில் சுகாதார அமைச்சின் கருத்தை பலரும் வினவியிருந்தனர். மருத்துவ ரீதியில் பிறப்பிலேயே நிரந்தரமாக பிள்ளைப் பாக்கியம் அற்ற நிலையையே "மலட்டுத் தன்மை" என கருதப்படுகின்றது. மனிதர்களில் சிலருக்கு பிறப்பிலேயே பிள்ளைப பாக்கியம் அற்ற நிலைமை காணப்படுகின்றது.

இதற்கு குடும்ப பராமரிப்பு நிலையத்தினூடாக சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

மற்றும் சிலர் தங்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டை செயற்கையாக ஏற்படுத்திக் கொள்வதற்காக சத்திர சிகிச்சை மூலம் நிரந்தர மலட்டுத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ள விண்ணப்பிக்க முடியும். இந்த இரண்டு முறைமைகள் தொடர்பிலும் பொதுமக்களுக்கான சேவையை வழங்க குடும்ப சுகாதாரப் பிரிவு செயற்படுகின்றது.

மேலைத்தேய மருத்துவ முறைமையில் (ஆங்கில மருத்துவத்தில்) நடைமுறையில் சத்திர சிகிச்சை மூலமாக மட்டுமே மலட்டுத் தன்மையை ஏற்படுத்த முடியும் என்பது உறுதியான ஒன்றாகும். பெண்களுக்கு இதற்காக வேண்டி எல்.ஆர்.டி. சத்திரசிகிச்சை முறைமையும் ஆண்களுக்கு வாசெக்டமி (Vasectomy) சத்திர சிகிச்சை முறைமை மட்டுமே தற்பொழுது நடைமுறையில் உள்ளன.

இதுதவிர, ஆங்கில மருத்துவ முறைமையில் மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் எந்தவொரு சிகிச்சை முறைமையும் ஏற்படுத்தப்படவில்லையெனவும் மருத்துவ நிபுணர் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# மாஞ்சோலை எல்லை வீதியில் மக்களின் சொத்துக்கள் விசமிகளால் சேதம்

வாழைச்சேனை, மாஞ்சோலை எல்லை வீதியை அண்டியுள்ள சுமார் 20 பேருக்குச் சொந்தமான காணிகளில உள்ள வேலிகள், மரங்கள் மற்றும் குடிசைகளுக்கு நேற்று சேதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றகோணத்தில விசாரணைகளை முனனெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டோர் கூறியதாவது,

நேற்று அதிகாலையிலிருந்து விடியும்வரை மாஞ்சோலை எல்லை வீதியை அண்டியுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளிலுள்ள வேலிகள், பயன் தரும் மரங்கள், குடிசைகளும் மற்றும் ஏனைய சொத்துக்கள் விஷமிகள் சிலரால் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளோம். அதனடிப்படையில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

பிரதேசத்தில் இன முறுகலை ஏற்படுத்தும்விதமாகவே இவ்விதம் முஸ்லிம்களின் பாரம்பரிய காணிகளுக்குள் அத்துமீறி சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். (ம)

# நயினாதீவு அம்மன் கோவிலில் ஏக ஷண்டி ஹோமம் நாளை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் உலக நன்மை கருதியும் மக்களின் நன்மை கருதியும் வருடந்தோறும் நடைபெறும் ஏக ஷண்டி ஹோமம் நாளை 06.03.2018 செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அம்பிகையின் அருளாசிகளைப் பெற அரியதோர் சந்தர்ப்பம் ஆகையால் இந்த ஷண்டி ஹோமத்தில் கலந்து கொண்டு எல்லோரது நன்மைக்காகவும் பிரார்த்தித்து அம்பகையின் தெய்வீகத் திருவருளை அனைத்து மக்களும் பெற்றின்புறும் வண்ணம் அலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ஏ9 வீதியில் (புங்கன் குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவைவரை, கச்சேரி கிழக்கு ஒழு ஙகை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி, மாதகல, யம்புகோளப் பட்டிணம், குசுமாந்துறை, காட்டுப்புலம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசததில** சாளம்பைகககுளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், நெளுக்குளத்திலிருந்து இராயேந்திரகுளம் வரை, ஓமேகா லைன் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீடு கட்டும் வேலையைத் தொடங்க எந்த நட்சத்திரத்தில் கிரகங்கள் இருக்க வேண்டும்?**

சூரியன்: பரணி 3, 4 பாதங்களிலும் கார்த்திகை 4 பாதங்களிலும் ரோகினி 1 ஆம் பாதத்திலும் சூரியன் சஞ்சரிக்கக்கூடாது.

செவ்வாய்: கார்த்திகை 4 பாதங்கள், மகம் 4 பாதங்கள், அத்தம் 4 பாதங்கள், ரேவதி 4 பாதங்கள், பூசம் 4 பாதங்கள், பூரம் 4 பாதங்கள், மூலம் 4 பாதங்கள். இந்த நட்சத்திர பாதங்களில் செவ்வாய் சஞ்சரிக்கக் கூடாது.

புதன்: அச்சுவினி 4 பாதங்கள், ரோகினி 4 பாதங்கள், மிருகசீரிடம் 4 பாதங்கள், திருவோணம் 4 பாதங்கள், அத்தம் 4 பாதங்கள், சித்திரை 4 பாதங்கள். இந்த நட்சத்திர கால்களில் புதன் சஞ்சாரம் செய்யும் போது வீடு கட்டத் தொடங்கினால் விரைவில் வீடு முழுமையடையும்.

குரு: உத்தரம் 4 பாதங்கள், உத்தராடம் 4 பாதங்கள், பூராடம் 4 பாதங்கள், திருவோணம் 4 பாதங்கள், உத்தரட்டாதி 4 பாதங்கள், ரோகினி 4 பாதங்கள். மிருகசீரிடம் 4 பாதங்கள், ஆயிலியம் 4 பாதங்கள், பூரம் 4 பாதங்கள். இந்த நட்சத்திரக் கால்களில் குரு சஞ்சாரம் செய்யும் போது வீடுகட்டத் தொடங்கினால் விரைவில் வீடு முழுமையடையும். (தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கருவில் திருவுடையார்



ஆத்மதாகம் கொண்ட மனிதன் இந்த நினைப்பிலே உருகி நிற்கும் போது, அந்த நினைப்பானது குருவை அவன் முன் கொண்டு வரும். குரு வருவதற்கு வேறு மார்க்கமேதும் கிடையாது.

ஓர் ஏற்புத் தன்மை இருந்தால் குருதானே இங்கே வருவார். எனவே, குருவைத் தேடி அலைய வேண்டியதில்லை. தன்னை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உயரட்டும். தானாகவே அவனுடைய எண்ணம் உயர்நிலையில் பக்குவப்படட்டும். குரு தானாக வருவார்.

மனிதனுடைய எண்ணம் என்பது என்ன? அது பிரம்மத்தினுடைய சாயை தானே? இயக்கம் தானே எண்ணமாக, அறிவாக இருக்கிறது? உணர்ந்த நிலையில் அறிவாகவும், மயக்க நிலையில் மனமாகவும் அதுவே குறிப்பிடப்படுகிறது. அது தானாக அமர்ந்த நிலையில் பிரம்மமாக உள்ளது. பக்குவப்பட்டவன் நினைந்தால் குருவர வேண்டியதுதானே? (Fraction demands and Totality Supplies).

நம் முன்னோர்கள் செய்த தவப்பயனே குண்டலினி யோகம்

அவ்வாறு குரு வரவேண்டியதைத் தடுப்பது எது? ஏற்கனவே எண்ணியிருந்த எண்ணங்களால் உருவான ஒரு மேடு மத்தியிலே தடுக்கிறது. இதைக் கணித்து உணர்ந்து கொண்டு நல்லதிலேயே மனதை நிலைக்கச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். உங்களுடைய நல்ல கர்மத்தின் விளைவாகத் தான் நீங்கள் இந்த மனவளக்கலையை ஏற்று இருக்க முடியும். அது நீங்கள் நேரடியாகச் செய்த தவப்பயனாக இருக்கலாம் அல்லது உங்களது பெற்றோர்களுடைய தவப்பயனால் உங்களுக்கு இந்த உணர்வு நிலை கிட்டியிருக்கலாம். பெற்றோர்கள் மூலமாகக் கிட்டும் போது அதை நமது தமிழகத்துப் பெரியவர்கள் "கருவில் திரு உடையார்" என்று ஒரே சொற்றொடரில் வர்ணித்தார்கள்.

# கரணவாய் கொலின்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்



குப்பிளான் ஞானகலா விளையாட்டுக்கழகம் நடத்திய நண்பர்களின் சமர் பாகம் 2 மாபெரும் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி நண்பர்களின் சமர் பாகம் 2 சம்பியனை வென்று அசத்தியது.

40 அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரில் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதியது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொலின்ஸ் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 8 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டங்களை குவித்தது. அணி சார்பாக அருண் 23, செந்திரன் 21, ஜொனி 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் அணி 8 ஓவர்களில் 77 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. அணி சார்பாக துவாரகன் 31, விஷ்ணு 16, ஜெயந்தன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

போட்டியின் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஞானம்ஸ் அணி வீரன் ரஜீவனும் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக ஞானம்ஸ் அணியின் செந்திரனும் இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக கொலின்ஸ் அணி வீரர் துவாரகனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)









# கிரிடா சக்தி கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதிவரை போராடிய யாழ். மாவட்ட அணி



கிரிடாசக்தி கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி வரையில் யாழ். மாவட்ட அணி முன்னேறியிருந்தும், கொழும்பு மாவட்ட அணியிடம் இறுதியில் தோல்வியடைந்தது. இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களின் பெண்கள் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான தேசிய மட்ட கிரிடாசக்தி கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது குருநாகல் மாவட்டத்தில் இடம்பெற்று வந்தது. யாழ். மாவட்ட பெண்கள் அணியானது முதற் சுற்றில், 28:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் காலி மாவட்டத்தை வென்று, காலிறுதிக் குத் தகுதி பெற்றது.

காலிறுதியில் குருநாகல் மாவட்டத்தை 30:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. அரையிறுதியில் மாத்தறை மாவட்ட அணியை, 32:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை குருநாகல் எம்.சி.சி. கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட தெரிவு அணியை எதிர்த்து கொழும்பு மாவட்ட அணி மோதியது.

இப்போட்டியில் கொழும்பு மாவட்ட அணி, 40:24 புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது. யாழ். மாவட்ட அணியின் பயிற்றுநராக சிவகுருநாதன் வல்லவக்குமாரன் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-26)

# வடக்கு மாகாண மேசைப்பந்தாட்டம் நிஷாந் கிண்ணம் வென்று அசத்தல்

வடமாகாண மேசைப் பந்தாட்டச் சங்கம் நடத்திய மாபெரும் மேசைப்பந்தாட்டத் தொடர் கடந்த 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இத்தொடரின் 8-10 வயதுப் பிரிவுக்கான போட்டியில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் செ. நிஷாந் சம்பியன் பட்டத்தை வென்றார். (க)



# மாபெரும் மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மாதகல் விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கணபதிப்பிள்ளை வீரவாகு ஞாபகார்த்த மாபெரும் 2018 ஆம் ஆண்டிற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளனர். அணிக்கு ஒன்பது பேர் எட்டு ஓவர்கள் கொண்ட இத் தொடரில் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் 077 590 9396, 077 103 0615, 077 199 9674 என்ற இலக்கங்களுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு மாதகல் விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

# பருத்தித்துறை பிரதேச செயலக கிரிக்கெட் போட்டியில் வீனஸ் சம்பியன்

பருத்தித்துறை பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வல்லை அணியும் வீனஸ் அணியும் இறுதிக்குத் தெரிவாகி பலப் பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி ஆறு ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் திருபரன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் சாருகன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

57 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வல்லை அணி 6 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்று 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்த வெற்றியின்மூலம் வீனஸ் அணி பருத்தித்துறை பிரதேச செயலக கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (க)





அளவெட்டியில் நடைபெற்ற கரைச்சி பிரதேச செயலகத்திற்கிடையிலான ஆண்களுக்கான கபடி போட்டியில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழகம் வட்டக்கச்சி குறிஞ்சி விளையாட்டுக் கழகத்திற்கு எதிராக மோதியதில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 45:12 புள்ளியை பெற்று முதலாமிடத்தையும் பெண்கள் அணி 45:6 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. (க)

## கொக்குவில் பிரம்படி...

துள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த இரு சந்தேகநபர்களையும் கைது செய்த பொலிஸார் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

கொக்குவில் பிரம்படி பகுதியில் உள்ள வடு ஒன்றுக்கு நேற்று மாலை 7 பேர் கொண்ட குழுவினர் சென்றுள்ளனர். அங்கு ஒருவருடைய பெயரை கூறி அந்த நபர் எங்கே என கேட்டுள்ளனர்.

அப்போது வீட்டில் இருந்தவர்கள், குறித்த நபர் இல்லை என தெரிவித்ததை அடுத்து அவ வீட்டின் வாசல் கதவை சேதப்படுத்தியதுடன், போத்தல்களால் வீட்டில் தாக்குதல் மேற்கொண்டு விட்டு பெற்றோல் குண்டையும் வீசிவிட்டு தப்பித்துச்சென்றனர். இத் தாக்குதலில் வீட்டின் யன்னல் மற்றும் கதவுகள் சேதமடைந்துள்ளன.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட அதே நேரம் அயலவர்கள் ஒன்று கூடி மேற்குறித்த குழுவில் உள்ளதாக சந்தேகத்தின் பேரில் இரு நபர்களை மடக்கிப்பிடித்து சரமாரியாக தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். பின்னர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த இரு சந்தேக நபர்களையும் கைது செய்ததுடன் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இருவரும் 19 வயதையுடைய இளைஞர்களாவர். குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## மக்களை நேசிப்பவர்...

ஜனாதிபதி சட்டத்தரணியான மு.சிற்றம்பலம், சட்டத்தரணி தொழிலில் ஈடுபட்டு 50 வருடங்கள் நிறைவுபெற்றுள்ளன. அதனை முன்னிட்டு வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு அவர் உரையாற்றுகையில்,

சட்டத்தரணி சிற்றம்பலத்தின் உழைப்பாலும் மேற்பார்வையாலும் 2007 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 3ஆம் திகதி மேல்நீதிமன்றம், 2011ஆம் ஆண்டு புரட்டாதி 29ஆம் திகதி குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்கள் வவுனியாவில் உருவாகின.

1980ஆம் ஆண்டு மாவட்ட சபைத் தலைவரானார். அவரின் அந்தப் பதவிக்காலத்தில்தான் மாவட்ட செயலக நுழைவாயிற் பகுதியில் பண்டாரவன்னியனின் சிலையை நிறுவினார். அதன் பின்னர் வவுனியா மாவட்ட நகரசபை உப தலைவராகக் கடமையாற்றினார்.

1990ஆம் ஆண்டில் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டதால் கனடா சென்றார். அங்கு பிரஜா உரிமை கிடைத்த போதிலும் மீண்டும் நாடு திரும்பினார். வவுனியா நீதிமன்ற பிரகாரத்தில் ஒரு சட்டநூலகத்தைத் திறக்க முன்னின்றார். 2011ஆம் ஆண்டு புரட்டாதி 29ஆம் திகதியன்றுஅந்தநூல் நிலையம் திறக்கப்பட்டது.

மேலும் சட்ட உதவி ஆணைக்குழுவின் வவுனியா பணிப்பாளராக அவர் 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றினார். அவரது சேவையின் பொருட்டு அவருக்கு விருதும் கிடைத்தது. கடந்த 2012ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதி சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பதினைந்து வருடங்களுக்கு மேலாக அவர் பதில் நீதவானாகவும் கடமைபுரிந்து வருகின்றார்.

அரசியலினுள் நுழைய பல சந்தர்ப்பங்கள் எழுந்தும் அவர் அவற்றைப் புறக்கணித்தே வந்துள்ளார். அவரைப் போன்ற மக்களை நேசிக்கும் பண்பான மனிதர்கள் அரசியலில் சேராவிட்டாலும் மக்கள் இயக்கமாகப் பரிணமித்திருக்கும் எமது தமிழ் மக்கள் பேரவையிலாவது சேர்ந்து எமக்கு உதவ வேண்டும் எனத் தெரிவித்தார். (ம)

## கடந்த காலங்களில்...

அவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கும் நீதியை நிலைநாட்டுவதே இந்த அலுவலகத்திற்கு உள்ள பொறுப்பாகும் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ம)

## அர்ஜுன் மகேந்திரனை...

ளார்.

வீரக்கெட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் பிரதான குற்றவாளியாக பெயரிடப்பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரனை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ஏற்கெனவே அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. அவர் நாட்டில் இல்லாத நிலையில், கடந்த வாரம் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது எதிர்வரும் 8ஆம் திகதிவரை அவருக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், அவரை சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்து நாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டின் பொதுச்சொத்துக்களை சூறையாடுவதால் மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர் எனக் குறிப்பிட்ட அமைச்சர், பொதுச்சொத்தை சூறையாடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார். அதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். (ம)

## இலங்கைக்கு...

கண்ணிவெடிகளை தடை செய்வதற்காக சாசனத்தின் ஐ.வாவின் விசேட தூதுவரான ஜோர்தானைச் சேர்ந்த இளவரசர் மிரெட் ராட் அல் ஹுசைன், இலங்கைக்கான தமது விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இலங்கையை வந்தடைந்த அவருக்கு விமான நிலையத்தில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

எதிர்வரும் 7ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருக்கவுள்ள இளவரசர் மிரெட் ராட் அல் ஹுசைன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன உள்ளிட்ட அரசின் முக்கிய அதிகாரிகளை சந்திக்கவுள்ளார். அத்தோடு, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுடன் இணைந்து வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதோடு, அங்கு கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையை நேரில் பார்வையிடவுள்ளார். இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களை சந்திக்கவுள்ளதோடு, கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்ட தரப்பினரையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை நாளை கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெறவுள்ள ஆளணி எதிர் கண்ணி வெடிகள் மீதான ஒட்டாவா சாசனம்- ஆசியாவின் சந்தர்ப்பங்களும் சவால்களும் என்ற தலைப்பில் விரிவுரையொன்றையும் ஆற்றவுள்ளார்.

கண்ணிவெடிகளை தடைசெய்வதற்கான ஒட்டாவா சாசனத்தில், 163ஆவது நாடாக இலங்கை கடந்த 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி இணைந்துகொண்டது. அந்தவகையில் கண்ணிவெடிகளை தடை செய்வதற்கான சாசனத்தின் விசேட தூதுவரது இந்த இலங்கை விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது.

இதேவேளை, எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் கண்ணிவெடிகளற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கான செயற்றிட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இந்நிலையில், அதனை செயற்படுத்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் செயற்றிட்டங்களையும் அர்ப்பணிப்புகளையும் உறுதிப்படுத்த இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாக அமையுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## ஐ.தே.க அறிக்கை...

கப்பட்டுள்ளார். ஏனைய உறுப்பினர்களாக ஹரீன் பெர்ணாந்து, சாகல ரத்நாயக்க, அகில விராஜ் காரியவசம் மற்றும் அஜித் பீ. பெரேரா ஆகிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் குழுவை கடந்த வாரம் நியமித்திருந்தார்.

பிரதமரை மாற்ற வேண்டும் என்ற கருத்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் ஐ.தே.கட்சிக்குள் சூடுபிடித்துள்ளது. பிரதமரை மாற்றவேண்டும் என்ற கோஷம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைக்கும் அளவுக்கு மாறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தருமபுரம் கல்மடு...

இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கி உள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப். பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்றுள்ளது,

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து வட்டக்கச்சி கல்மடுக் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை கைப் பற்றி 80 லீற்றர் கசிப்புடன், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களைக் கைப் பற்றியுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸார் நிர்மூலமாக்கி உள்ளனர்.

இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## புலிக்கு பயந்து...

கூடத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் யாழ்ப்பாணத்தில் இந்தியத்துணைத்தூதுவர் அலுவலகம் திறக்கப்பட்ட காலத்தில் இருந்து துணைத் தூதுவர்களாக தமிழர்களே நியமிக்கப்பட்டுள்ளார்கள். அது எமக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு வரப்பிரசாதமாகும்.

வால்மீகி இராமாயணத்தை கம்பர் தமிழில் எழுதிய போது அந்த இராமாயணப்பாடல்களுக்கு உரை எழுதாமல் விட்டு விட்டார். கம்ப இராமாயணத்திற்கு கம்பர் உரை எழுதாத காரணத்தினால் அவருக்கு பின் தோன்றிய தமிழ் அறிஞர்களும் இலக்கிய விற்பன்னர்களும் தத்தமது திறமைகளுக்கேற்ப இராமாயணத்திற்கான உரைகளைப்புதிது புதிதாக உருவாக்கிக் கொடுத்தார்கள்.

அதே போன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இராப்போசன விருந்து உபசாரத்தில் நடராஜனுக்கு யாழ் மக்கள் சார்பாக வாள ஒன்றை ஞாபகார்த்தப் பரிசிலாக வழங்கியிருந்தமைக்கு வெவ்வேறு விதமாக அர்த்தம் வழங்கப்பட்டுள்ளது. கம்பர் உரை எழுதாமையால் தமிழறிஞர்கள் எவ்வாறு தமது திறமைகளைத்தாம் எழுதிய உரைகளின் வாயிலாக வெளிப்படுத்தினார்களோ அதேபோன்று எமது ஊடகவியலாளர்களும் மாசி 25ஆம் திகதி தொடக்கம் இன்று வரை விதம்விதமான கற்பனை வளத்துடன் அன்று கையளித்த வாளுக்கான குறியீட்டுச் செய்திகளை வெளியிட்டுவருகின்றார்கள். அது மட்டுமல்லாது எனது அரசியற் போக்கு இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணக்கூடிய விதத்தில் அமைந்திருப்பதாகவும் அதில் அரசியல் ரீதியான உள்ளர்த்தங்கள் இருப்பதாகவும் கூறி வருகின்றார்கள்.

உதாரணத்திற்கு வடக்கு கிழக்கு இணைந்த சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதில் இந்தியாவின் முக்கியத்துவம் பற்றியும் இந்தியாவுக்கு இருக்கின்ற தார்மீகக் கடமை பற்றியும் நான் வலியுறுத்தி வருவதை நான் இந்தியாவிடம் அடிபணிந்து விட்டதாக சில பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாங்கள் எமது அண்டை நாடான இந்திய வல்லரசுடன் நெருங்கிய உறவுகளைப்பேணி வருவது யதார்த்த பூர்வமானது. அதற்கு உள்ளர்த்தங்கள் கற்பிக்கப்படுவது நகைப்பிற்குரியது.

எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான தொடர்புகள், எமது பிரச்சினையில் கடந்த நான்கு தசாப்தங்களாக இந்தியா ஏற்படுத்தியுள்ள பல்வேறு மட்டங்களிலான தலையீடுகள், மற்றும் இன்றைய பூகோள அரசியலில் இந்தியாவுக்கு இருக்கின்ற முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையினை பெற்றுக்கொள்ளும் எமது முயற்சிகளில் இந்தியாவுடனான நட்பு, மேலும் நேர்மையுடனும் இதயசுத்தியுடனுமான பரஸ்பர அரசியல் ராஜதந்திர நடவடிக்கைகள் ஆகியன அவசியமானவை.

இதனை இந்திய அடிபணிவு அரசியல் என்று விமர்சனம் செய்வது பொருத்தமற்றது. இந்தியா எமக்கு முக்கியமானது. இந்தியாவின் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் நாம் கரிசனை கொண்டுள்ளோம். அதேவேளை இலங்கையில் இணைந்த வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான வளர்ச்சி ஆகியன இந்தியாவுக்கு எந்தளவுக்கு நன்மையானதும் இன்றியாமையாததுமானது என்ற உண்மையின் அடிப்படையிலானதே இந்தியா தொடர்பிலான எனது கூற்றுக்கள்.

யுத்தம் காரணமாக பாரிய அழிவினை சந்தித்து தொடர்ந்தும் பல அடக்குமுறைகளுக்குள்ளும் இராணுவ கெடுபிடிகளுக்குள்ளும் வாழ்ந்து வரும் எமது மக்கள் தமது வரலாற்று ரீதியான அடையாளங்களும் உரிமைகளும் பாதுகாக்கப்பட தக்க ஒரு தீர்வினை ஏற்படுத்துவதற்கு இந்தியா காத்திரமானதும் துணிச்சல் மிக்கதுமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ளும் என்று எமது மக்கள் நம்பியிருக்கின்றார்கள். எமது மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் கலை கலாசார ரீதியான உறவுகள் ஒத்துழைப்புக்கள் ஆகியன எமது உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு அடித்தளம் இடுவன என்றும் அவர்கள் நம்புகிறார்கள். கசப்புணர்வுகள், நம்பிக்கையீனங்கள், சந்தேகப்பார்வை ஆகியவற்றை புறம்தள்ளிவைத்து எமது இலக்கை அடைவதற்காக இந்தியாவுடன் பரஸ்பர நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் இதயசுத்தியுடன் நாம் செயற்பட வேண்டிய காலம் இது.அத்துடன் எனது தனிப்பட்ட அரசியற் போக்கு குறித்து இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தி விமர்சிக்கின்றமை ஹாஸ்யம் நிறைந்தது.

ஒன்றை எம் பத்திரிகையாளர்கள் மனதில் வைத்திருக்க வேண்டும். புலிகளுக்குப் பயந்து இந்திய நாட்டைத் தஞ்சம் அடையவோ இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து புலிகளை அழிக்கவோ எனக்குத் தேவையிருக்கவில்லை.

எம் மக்கள் நலனுக்காக அன்றி இந்தியாவிடம் எதனையும் யாசிப்பதற்கு எனக்குத் தேவைகள் இல்லை. காங்கேசன்துறை பற்றிய எமது கோரிக்கையை இந்தியா பெருமனதுடன் ஏற்றுள்ளது. அதேபோல் பலாலி விமான நிலையம் பற்றிய எமது கோரிக்கைக்கும் இலங்கை அரசாங்கமும் இந்திய அரசும் செவி சாய்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். எது எப்படியோ நாம் எமது அரசியற் கொள்கைகளில் வழுவாது நின்று எமது மக்களுக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய அனைத்து அனுகூலங்களையும் பெற்றுக் கொடுப்பதே எமது சிந்தனையாகும். அதனைப் பத்திரிகைகள் கொச்சைப்படுத்தாது இருக்க வேண்டும்.

அரசியற் கட்சிகள் பலவும் அடுத்த மாகாண சபைத் தேர்தலுக்கான முத்தாய்ப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபடத்தொடங்கி விட்டன. இந்த நிலையில் எமது ஒவ்வொரு செயலும் கட்சிகளால் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. எமது நடவடிக்கைகள் சம்பந்தமாக புதிது புதிதாக உரைகள் எழுதப்பட்டு வருகின்றன. தொடர் தேடல்களே விடியல்களுக்கு வழிவகுக்கும் என்ற வகையில் இவர்களின் முயற்சிகள் புதிய புதிய தேடல்களாக மாறி எம்மையும் வழிப்படுத்தட்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## பிரதமர் ரணிலுக்கு...

நடத்தி வந்தனர்.

அவர்கள் தமது திட்டத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுத்துவதற்கு பேச்சு நடத்தியிருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவின் அடிப்படையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்தது.

இந்த இடைவெளிக்குள் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கு மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி முந்திக் கொண்டுள்ளது. (ம)

அறிமுகம் - Rs. 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-1728)
021 222 6868, 077 736 0353, 075 987 5800

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி (ஒஸ்காலேன் அருகில்) உரும்பிராயில் உள்ள புதிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :
077 069 0275 (3086)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-1727)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## தேவை

கொங்கிறீற் கல் அரியும் இயந்திரம் மற்றும் கொங்கிறீற் குழைக்கும் (Mixture) இயந்திரம் உடன் தேவை. (C-1761)
தொடர்புகளுக்கு : 0770336945

## இயந்திரங்கள் விற்பனைக்கு

நெல் உடைக்கும் இயந்திரம், புல் கொட்டை அரிப்பான், கொப்பறா வெட்டும் கட்டர் ஆகியன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 473 8986, 077 999 7814 (C-1786)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் அமைந்துள்ள 15 பரப்பு சற்சதுரக்காணி (வசாவிளான் பாடசாலைக்கு சற்று முன்பாக) விற்பனைக்கு உண்டு. (3097)
தொடர்பு :-
T.P. No - 077 248 7572



யாழ் மக்களுக்காக HONDA வழங்கும் மாபெரும் சலுகை
காசு, லீசிங் மற்றும் மாற்றீடுக்கான விசேட விலைக்கழிவு 3900/=
HONDA
அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிளுக்கும் புதிய ஹொண்டா மோட்டார் சைக்கிள்.

## குறைந்த ஆவணங்களுடன் லீசிங் விசேட விலைக் கழிவுகள் உடன்



லீசிங் FREE!
- SLS தலைக்கவசம்
- யக்கெட்
- காப்புறுதி
- பதிவுக்கட்டணம்
- இலவச சேவைகள் ஐந்து
- இரண்டு வருட உத்தரவாதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Din Apdar | 24 3900/= | 240 000/= | CB Hornet Apds | 401 900/= | 398 000/= |
| Activai | 231 900/= | 228 000/= | CB Hornet Apdds | 431 900/= | 428 000/= |
| Activa3g | 221 900/= | 218 000/= | CBHornet Apds2 | 414 900/= | 411 000/= |
| Aviator | 245 900/= | 242 000/= | CBHornetApdds2 | 440 900/= | 437 000/= |
| CD110Drem | 218 900/= | 215 000/= | CB unicorn 160 | 351 900/= | 348 000/= |
| Navi | 181 900/= | 178 000/= | Shine Apdsh | 271 900/= | 268 000/= |

மாற்றீட்டுக்கான உடன் காசுக்குரிய விசேட சலுகைகள் பலவும் ...
பழைய ஒன்றுக்கு புதிய ஒன்று



பங்குனி 3 - 11 திகதி வரை
சுழுமலைச் சந்தி அருகாமை
காலை 9 முதல் இரவு 8 மணிவரை
R.R.S.C. மோட்டோர்ஸ், (முஞ்சிற் மோட்டார்ஸ்) யாழ் வீதி, மானிப்பாய்.
077 310 7549 / 076 833 9898
021 492 7627 (C-1788)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org (3090)
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.


காங்கிரஸ் விடுத்த அழைப்பையேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் ஹெலிகொப்டரில் அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு ஒலுவில் சுற்றுலா விடுதியில் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சியில் இப்படியான 02

## சட்டமா, பொலிஸ்மா அதிபரிடம்...

நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலில் நேற்று தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டதையடுத்து, ஸ்ரீலங்கா முஸ்லிம்


3 - 6 மாத ஹொட்டேல் பயிற்சியுடன் சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து செல்லும் ஏற்பாடு!



ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பலில் வேலைவாய்ப்பு
எந்தவொரு நாட்டுக்குமான என்ன வகை விசாவையும் வெல்ல
அழையுங்கள் 077 36 16 798
9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017 (C-1789)
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின் வீதி)
021 221 9 221 www.sikaram.lk

45,000 - ஒரு இலட்சம்
வரை வருமானம் + OT + கமிஷன் உடன் 200க்கு மேற்பட்ட
டுபாய் சுப்பர் மார்க்கட் வேலைவாய்ப்பு
விற்பனை ஊக்குவிப்பாளர் (Merchandisers)
காட்சிப்படுத்தல் உதவியாளர் (Shelf Stockers)
துப்பரவுப் பணியாளர் (Cleaners) ஆண்/பெண்
தொழிலாளர்கள் (Labourers)
இலவசம் சுற்றுலா வர்த்தக - சந்தைப்படுத்தல் சான்றிதழ் பயிற்சி
குறிப்பு: கம்பனி பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம் அறவிடப்படும்
சுப்பர் மார்க்கட்டுகளில் பணியாற்றுவோர் / அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை (C-1789)
விபரங்களுக்கு 0777 324 004
TGL Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222
SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11



## வீடு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஆடியபாதம் வீதி 01ம் ஒழுங்கையில் ஏறத்தாழ 1150 சதுர அடி, வாஸ்து முறைப்படி அமைக்கப்பட்ட, குடியிருப்பதற்கு தயார் நிலையில் நன்னீர் குழாய்க்கிணறு மற்றும் சுற்று மதிலுடன் புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.

தரகர்கள் தேவையில்லை



(1775)
தொடர்புகளுக்கு :- 070 300 4000



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக
- அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டட தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536 (C-1785)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.